761
1-31.

கிருஷிகன்

மாதப் பயிர்த் தொழில் பத்திரிகை

...ர் 12	விக்ருதி௵ தைமீ 1951௵ ஜனவரி, பிப்ரவரிமீ	மணி 1

...CE OF THE REGISTRAR OF ...
3 MAR 1951
MADRAS

பொங்கு[illegible]ங்களம் எங்கும் தங்குக

ஏராலே சேராக்கி யெருவாலே கருவாக்கி
நீராலே பைங்கூழை நிலைப்பிப்பார் தமையன்றிக்
காராலே காவேரி நதியாலே காசினியில்
ஆராலே பசிதீர்வா ரகலிடத்திற் பிறந்தோரே

—கம்பர்

பயிர்த்தொழில் பண்ணை மாத வெளியீடு

பொருளடக்கம்

		பக்கம்
1.	நமது இலக்ஷியம் (தலையங்கம்)	1
2.	ஆசிச்செய்திகள்	4
3.	நாட்டின் தொண்டர்க்கு நன்றி	5
4.	உணவுப்ரச்னை—கொள்முதலும் ரேஷனும் (ஸ்ரீனிவாசகன்) ...	7
5.	உரிமை எனது நண்பன் (கவிதை)	9
6.	பாதாளகங்கை அல்லது குழாய்க்கிணர் ...	10
7.	இந்திய விவசாயமும் சீர்திருத்த முயற்சிகளும் ...	14
8.	பட்டாபுரம் கலப்புப்பண்ணை	16
9.	கிராம சீரமைப்பு வேலை	19
10.	பட்டிக்காடு—(முருகனார்)	23
11.	நாம் ஏன் சிறந்த விவசாயக்கருவிகளை உபயோகிக்கவேண்டும் ...	25
12.	கிருஷிகன் பஞ்சாங்கம்	28

கிருஷிகன் நேயர்களுக்கு

அடுத்த இதழில்——

1. கேள்வியும்—பதிலும்
2. தேவையும்—விற்பனையும் (நேயர்களின், இலவச விளம்பரப்பகுதி)
3. நமது களஞ்சியம் (மதிப்புரை பகுதி)

——ஆகிய புதி[illegible]

அம்சங்கள் வெளியாகிறது. மேலும் கிராமவாசிகளுக்கும், கிருஷிகர்களுக்கும் உபயோகமுள்ள பல அரிய கட்டுரைகள் துடர்ச்சியாக வெளிவருவதால் சந்தாதாரர்களாக உடனே பதிவு செய்துக்கொள்ள கோரப்படுகிறார்கள்.

—ஆசிரியர்.

THE "AGRICULTURIST"
A Monthly Journal Devoted to Agriculture and Rural Welfare

REGISTRAR OF BOOKS
MADRAS

"கிருஷிகன்"

[பயிர்த்தொழில் முன்னேற்றப் பத்திரிகை]

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"
—ஸ்ரீ பாரதியார்.

கதிர் 12	விக்ருதி௵ தை௴ 1951௵ ஜனவரி, பிப்ரவரி௴	மணி 1

நமது இலக்ஷியம்

நமது நாடு அடிமைத் தளையிலிருந்து விடுதலையாகி மூன்று ஆண்டுகள் கடந்துபோயின. இன்னும் நாம் வறுமை, பஞ்சம், பட்டினியிலிருந்து விடுதலைப் பெறவில்லை.

சுதந்திரம் பெற்று குடியரசுமாகி ஓராண்டும் ஓடிவிட்டது. ஆனாலும் நாம் ஓரளவுகூட நம் சுயத்தேவையைப் பூர்த்திசெய்துக் கொள்ளக்கூடவில்லை.

மனிதனது குறைந்த அளவுத் தேவையாகிய "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" என்பதுபோல், வேளைக்கு கால் படி அரிசிக்கும் வழியின்றி, இரண்டு வேளைக்கும் சேர்ந்து (கால் படி) ஆறு அவுன்ஸ் அரிசிக்கு திண்டாடி நிற்கும் இந்த நிலைமையில் ஒவ்வொருவரும் தம் கடமையை நிறைவேற்றுவது எங்ஙனம்? "பசி வந்திட பத்தும் பறந்து போகும்" அல்லவா?

நாளுக்கு நாள் அதிகமாகிவரும் சட்டங்கள், கண்ட்ரோல் களால் லஞ்சம், ஊழல், கொள்ளைலாப வியாபாரம் (கருப்பு

மார்க்கெட்) அதிகமாகி வருகிறது நாட்டிலே—இவைகளை ஒழிப்ப தற்காக செய்துள்ள பல சட்டதிட்டங்களும் உள்ளது ஏட்டிலே.

பாரதநாட்டிலே புதிய சகாப்தத்தை உண்டாக்கி, நவ இந்தியாவை சிருஷ்டித்து நம்மை சுபிக்ஷ பாதையில் கொண்டுசெல்ல அல்லும் பகலும் உழைக்கும் நம் சுதந்திர சர்க்கார், தலைவர்கள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், பாட்டாளிகள் முதலியவர்களுடைய முயற்சிக்கும் திட்டங்களுக்கும் இன்று பெருந் தடையாக உள்ளது இப்பெரும் உணவுப் பிரச்னைதான் என்றால் மிகையாகாது "அன்ன விசாரம் பெரிய விசாரம்" தானே. இந்த நிலமையை பயன்படுத்திக்கொண்டு, அரசியல், சமூகப்பிற்போக்குக் கக்ஷிகள் பல ஏற்பட்டு நாளுக்குநாள் விருத்தியாகி மக்களிடையே எங்கும் துஷ்பிரசாரம் செய்துக்கொண்டு வருகிறது.

எனவே நம் நாட்டில் தற்போது இருந்துவரும் இவ்வுணவு, உடைப் பஞ்சங்கள் தீர்ந்து, பொருளாதாரம் விருத்தியாகி அரசியல், சமூக பொருளாதார பிணக்குகள் ஒழிந்து, ஒற்றுமையுடன் நல்வாழ்வு வாழ உடனடியாக செய்யவேண்டிய வேலை ஒவ்வொருவரும் கூடியவரை உற்பத்தியை பெருக்க முயற்சிப்பதுதான்.

உற்பத்தியைப் பெருக்க, இயற்கையின் சோதனையால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு அவசியமான உதவிகளைத்தந்து அவர்களுடைய குறைகளைக் களைந்து நிலமையைச் சீர்படுத்தி முன்னேறச் செய்யவேண்டியது மிக மிக அவசியமாகும்.

விவசாயிகளும் தற்கால நிலமையை உணர்ந்து, தங்களுக்குள் ஐக்கியமும கட்டுப்பாட்டையும் வளர்த்து, தங்களுக்கு ஆவன சர்க்காரிலிருந்து அடைந்து, பயனளிக்காத பழைய முறைகளை நீக்கி சிறந்த புதிய முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்கி கல்வி, சமூகம், பொருளாதார வாழ்க்கைத் துறைகளில் முன்னேற்றமடைய உழைக்கவேண்டும்.

உணவு உற்பத்தி—விவசாய (கிராம) முன்னேற்றம் ஆக இந்த இரண்டு அம்சங்களும்கொண்ட இந்த "அதிக உற்பத்தி" (Grow More Food) இயக்கம் என்னும், சர்காரின் இந்த அடிப்படை திட்டத்தின் ஆக்க முயற்சியில் கிருஷிகருக்கு ஊக்கம் உண்டாக உழைப்பதே ஒவ்வொருவருடைய கடமையாகும்.

ஆகவே, நம் இந்திய சமூதாயத்திலே ஏற்றத்தாழ்வு நீங்கி, கைத்தொழில் வியாபாரம் பெருகி, பொருளாதாரம் விருத்தியடைய அதிக (உணவு) உற்பத்திக்குச் சேவை செய்வதே நமது கிருஷிகன் இலக்ஷியம்.

நமது இலக்ஷியம் ஈடேரவும் நாட்டிலெங்கும் நல்வாழ்வு பெருகவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்

(சர்தாரின் அபிலாஷை)

பிறநாட்டாரை எதிர்பார்ப்பது வெட்கக்கேடு

உணவுப் பஞ்சமான தேசீய நெருக்கடியைச் சமாளிக்கும் முயற்சியில் ஒவ்வொரு விவசாயியும் தன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அக்கரை காட்டவேண்டும். விவசாயம் அதிகமாக இருக்கும் இந்தியாவில் உணவுப்பஞ்சம் ஏற்பட்டிருப்பதோர் விபரீதம். இந்தியாவின் பெரும்பான்மையான மக்கள் விவசாயிகளாக இருந்தும் இங்கு வேண்டிய அளவு உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படவில்லை யென்பது நம்முடைய விவசாயத் திறமையின் தன்மையையே காட்டுகிறது. எல்லா தரிசு நிலங்களிலும் ஒரு அங்குலர்கூட விடாமல் முழு மூச்சுடன் முயற்சி செய்து, நல்ல முறையில் கூட்டுறவு மனப்பான்மையுடன் உணவு உற்பத்திச்செய்ய முனைவோமானால் நம்முடைய உணவுத் தேவைகளை நாமே பூர்த்தி செய்துக்கொள்ளக்கூடிய நிலையை வெகு விரைவிலேயே நாம் அடையக்கூடும் என்பதில் எனக்கு சிறிதும் சந்தேகம் இல்லை.

அதி அத்யாவசியமான தேவைகளுக்குக்கூட போதிய அளவு இல்லாத வெளிநாட்டு நாணயங்கள் உணவு இறக்குமதியாகச் செலவிடப்படுவது இதனால் நிற்கும். பிறதேசங்களிலிருந்தும் நாம் உணவுப் பொருள்களை வரவழைப்பதால் நம்முடைய தொழில் அபிவிருத்தி முயற்சிகளெல்லாம் பாதகமடைகின்றன. நம்முடைய பொருளாதார முன்னேற்றத்தை இது தடுக்கிறது. சில வருஷங்கள் அல்லது சில மாதங்களுக்குமுன் இது சகிக்கக் கூடியதாக இருந்திருக்கலாம். ஆனால் இனி இந்த நிலைமையை நாம் நீடிக்க விடமுடியாது. இது நம் நாட்டின் எதிர்கால வாழ்வுக்கும் பொருளாதாரத்திற்கும் சம்பந்தப்பட்டமுக்கிய விஷயம். இந்திய தேசீய நெருக்கடியை சமாளிக்க ஒவ்வொரு விவசாயியும் தன்னாலியன்றதை எல்லாம் உடனடியாகச் செய்யவேண்டும்.

ஒரு கதிர்விட்ட இடத்தில் இரண்டு கதிர்கள் காணும்படி பயிர்ச்செய்யுங்கள். எவ்வளவு தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவரமுடியுமோ அவ்வளவையும் சாகுபடிக்கு கொண்டு வாருங்கள்! இதற்காக தினசரி வாழ்க்கை சௌகரியங்களை தியாகம் செய்யவேண்டி நேரிட்டாலும் பொருட்படுத்தாதீர்கள்.

—சென்னைச்செய்தி.

கிருஷிகனுக்கு ஆசிச்செய்திகள்

"கிருஷிகன்" பத்திரிகையின் ஆதிஸ்தாபகர் ஸ்ரீ ராவ்பகதூர் ஜே. செல்வரங்கராஜு அவர்களின் புதல்வர் ஸ்ரீ ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள் எழுதுகிறார்:—

சுதந்திர குடியரசு தினத்தில் உதயமாகும் "கிருஷிகன்" தன் ஒளியால் தாய் நாட்டின் உணவுப்பஞ்சம் என்னும் பேயை விரட்டி வெற்றிக்கொடி நாட்டவேண்டுமென அன்னை பாரத மாதாவை வணங்கும், பிரிய நண்பன்

* * *

மத்திய நெல் ஆராய்ச்சி கழக டைரக்டர் ஸ்ரீ கே. ராமையா அவர்கள் கட்டாக்கிலிருந்து எழுதுகிறார்:—

"தமிழ்நாட்டில் நீர்வளம் நிலவளம் ஒருங்கு பொருந்தியிருப்பினும் அதை நாம் நன்கு பயன் படுத்தாத குறையினால்தான் இப்பொழுது அங்கு (தமிழ்நாட்டில்) உணவுப் பஞ்சம் நிலவுவதற்கு முக்கிய காரணமென்று சொல்லவேண்டும். தவிர, நம் விவசாயிகள் ஆராய்ச்சி முறையில் சாகுபடி செய்தால் இப்பொழுது கிடைக்கும் மகசூலைவிட, குறைந்தபட்சம் நூற்றுக்கு பதினைந்து பங்கு அதிகமாக உற்பத்தி செய்யமுடியும். இதை முன்னிட்டு சென்னைச்சர்க்கார் "மேழிச்செல்வம்" என்னும் மாதப்பத்திரிக்கையை வெளியிட்டு வருகிறார்கள். அதில் விவசாயிகள் கையாள வேண்டிய முறைகளை அடிக்கடி அவ்வப்போது எடுத்துக் கூறிவந்தபோதிலும் தமிழ் நாட்டிற்கு இன்னுமொரு தமிழ்ப்பத்திரிகை மிக்க அவசியம் உள்ளது. அனுபவமுள்ள விவசாயிகள் ஆங்காங்கு பயிர்கள் சாகுபடி செய்யும் முறைகளைத் தெளிவாக யெடுத்துக்கூறி அவரவர்கள் அடைந்த பலாபலன்களையும் மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்கு "கிருஷிகன்" ஒரு சிறந்த வெளியீடாகு மென்பதற்குச் சிறிதளவும் சந்தேகமில்லை.

சாகுபடி முறையில் சில விஷயங்கள் மிகவும் சிறியதென்று தோன்றினாலும், அவைகள் பயிரின் மாசூலை அதிகமாக்குவதற்கு பெரிய தூண்டுகோலாயிருக்கும். அதனால் மற்ற விவசாயிகள் தங்கள் சாகுபடி முறையைச் சீர்திருத்திக்கொள்ள முடியுமென்று நினைக்கிறேன்.

"மேழிச்செல்வம்" தமிழ் நாட்டிற்கு பயன் தந்திருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. இதேமாதிரி மற்ற மாகாணங்களிலும் அந்தந்த மொழியில் ஒரு வெளியீடு மிகவும் தேவை யென்று கருதுகிறேன்.

"கிருஷிகன்" விவசாயப்பத்திரிகை தமிழ் விவசாயிகளுக்கு மேற்கூறிய பேருதவியையளித்து அதிக உணவு உற்பத்தி பண்ணுவதற்கு மிக்க பயன் படுமென விரும்புகிறேன்".

—தொடரும்

நாட்டின் தொண்டர்க்கு நன்றி

ராவ்பஹதூர் - ஜே. செல்வரங்க ராஜு அவர்களும் - கிருஷிகனும்

திருநெல்வேலி ஜில்லா பாளையங்கோட்டையில் ராஜாக்கள் தெரு 1-ம் நெம்பர் இல்லத்தில் பரம்பரையாக வசித்துவந்த போஸ்டல் இன்ஸ்பெக்டர் ஜே. ஸ்ரீரங்கராஜு அவர்களின் இரண்டாவது குமாரராக 1869-ம் வருடம் இவர் பிறந்தார்.

திருநெல்வேலி ஹிந்து கல்லூரியில் இண்டர்மீடியட் பரீக்ஷைவரை கல்விக் கற்று சென்னை சைதாப்பேட்டையிலிருந்த விவசாயக் கல்லூரியில் சேர்ந்து முதல்வகுப்பில் தேறி கல்லூரியைச் சேர்ந்த விவசாயப் பண்ணையில் உதவிப் பார்வையாளராக உத்தியோகத்தில் அமர்ந்தார்.

ராவ்பஹதூர் - ஜே. செல்வரங்க ராஜு
1869—1932

விவசாயக் கல்லூரி கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டபொழுது ஷை கல்லூரியில் 4-வது அஸிஸ்டெண்ட் (தற்காலம் டிமான்ஸ்ட்ரேடர் பதவி) ஆக தேர்ந்தெடுக்கப்பட்டு படிப்படியாக பேராசிரியர் பதவி வகித்து கடைசியில் வெள்ளையர்களின் ஏகபோக உரிமையாயிருந்த டிப்டிடைரக்டர் பதவியையும் திறம்பட வகித்து செங்கற்பட்டு, வடாற்காடு, சித்தூர், தென்னாற்காடு ஆகிய நான்கு ஜில்லாக்களிலுள்ள கிராமங்களுக்கெல்லாம் நேரிற்சென்று விவசாயிகளுடன் அளவளாவி சர்க்கார் விவசாய இலாகா ஒன்று இருக்கிறதென்னும் விஷயத்தை விளங்க வைத்து, 1921-ம் வருடத்தில் உத்தியோகத்திலிருந்து ஒய்வு பெற்று, சென்னைக்கடுத்த கிண்டி ஜெகந்நாத் பாக் அன்னும் தன்னுடைய சொந்த பண்ணைத் தோட்டத்தில் வசித்து வந்தார். அக்

காலத்திலும் சைதாப்பேட்டை கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாகவும் நகரசபைத் தலைவராகவும் பதவி வகித்து பொதுஜன சேவை செய்திருக்கிருர். கடைசியில் சைதாப்பேட்டை நகரசபைத் தலைவராக இருந்தபோது 1932-ம் வருஷம் (64-வது வயதில்) காலமானுர்.

இவர் உத்தியோகத்திலிருந்த காலத்திலும்சரி, ஓய்வுபெற்றப் பிறகும் சரி, கிராம மக்களுக்காகவும், கிருஷித் தொழிலுக்காகவும், கிருஷிகர்களுக்காகவும் மிகுந்த பாடுபட்டு வந்தார் என்ருல் மிகையாகாது. அதற்கு அவர் ஆரம்பித்து நடத்தி வந்த "கிருஷிகன்" பத்திரிகையே தக்க சான்ருகும்—கிருஷிகன் பத்திரிகையின் உயர்ந்த நோக்கமும் அதிலுள்ள விஷயங்களும் கிருஷிகர்களுக்கு எவ்வளவு உதவியாக அக்காலத்தில் இருந்தது என்பது அப்பத்திரிகையைப் பார்த்தவர்கள் நன்குணர்வார்கள். அவ்வளவு உயரிய பத்திரிகைக்கு வருட சந்தா ரூபாய் ஒன்ருக இருந்தும், வறுமையின் காரணமாகவும் ஊக்கமில்லாததின் காரணமாகவும் அடிமை இந்தியாவில் கிருஷித்தொழில், கிருஷிகர், கிராமங்கள் எப்படி நலிவுற்றதோ அப்படியே "கிருஷிகனும்" நலிவுற்று 11-வது ஆண்டுடன் நின்றுவிட்டது.

இந்தப் பத்திரிகைக்குப் பெரிதும் உதவி செய்துவந்தவர்கள் ஸ்ரீ ராஜு அவர்களின் மூத்த சகோதரர், ஜே. தர்மரங்கராஜு அவர்களும் இளைய சகோதரர், ஜே. ஆர். ரங்கராஜு அவர்களுமாகும். தர்ம ரங்கராஜு அவர்கள் கூட்டுறவு இலாகாவில் டிப்டி ரிஜிஸ்டிராராக இருந்து கிராமவாசிகளுக்குப், கிருஷிகர்களுக்கும் சேவை செய்தவர். ஜே ஆர். ரங்கராஜு அவர்களை தெரியாதவர் தமிழ் நாட்டில் ஒருவரும் இருக்கமாட்டார்கள் என்றே சொல்லலாம். அவருடைய பிரபல நாவல் "இராஜாம்பாள்" மட்டிலும் 22 பதிப்புகள் வெளியிடப்பட்டிருக்கிறது என்ருல் அவருடைய தமிழ்த்தொண்டிற்கு வேறு அத்தாக்ஷி என்ன வேண்டும்?

புலிக்கு பிறந்தது பூனையாகுமா? ஷிராஜு குடும்பத்தாரால் ஆரம்பித்து வளர்த்துவந்த "கிருஷிகனை" மீண்டும் 12-வது மலரிலிருந்து கிருஷித் தொழிலுக்கு சேவைசெய்ய நடத்தவேண்டுமென்று கோறியதும் மனமுவந்து உரிமையை அளித்துவிட்ட ஜே. எஸ். ரெங்கராஜு (ஸ்ரீ செல்வரங்கராஜுவின் குமாரர்) அவர்களுடைய உதவியும் போற்றத்தகுந்ததே.

செய்ந்நன்றி மறவாத தமிழ் நாட்டில் பிறந்த நாம் தமிழ் நாட்டு கிராம மக்கள், கிருஷித்தொழில் கிருஷிகர்கள் இவர்களுடைய முன்னேற்றத்திற்கும் தமிழுக்கும் சேவை செய்துள்ள ஸ்ரீ ராஜுவின் குடும்பத்தாருக்கு "கிருஷிக"னை மேலும் மேலும் வளரச்செய்து, கிருஷித்தொழிலை முன்னேற்றி உணவு பஞ்சத்தை போக்குவதன்மூலம் நன்றி செலுத்துவோம்.

—ஆசிரியர்.

ஆராய்ச்சி மணி

அந்தக்காலத்தில் நீதி தவறாது அரசாட்சி செய்த மன்னர்களிடம் குடிமக்கள் தங்கள் குறைகளை தெரிவித்துக்கொள்ள பேருதவியாக இருந்தது. அரண்மனை வாயிலில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணி. இந்தக் காலத்தில் குடிகளுக்கு பேருதவியாக இருப்பது பத்திரிகைகள் தான்.

இந்தப் (ஆராய்ச்சி மணி) பகுதியில் நேயர்களின் குறைகள் பிரசுரிக்கப்படும். குறைகள் உண்மையானதாகவும், நிவர்த்திக்கான வழிகளோடும் இருக்கவேண்டுமே தவிர எவரையும் நிந்திக்கும் முறையில் இருக்கக்கூடாது.

செவி கைப்பச் சொற்பொருக்கும்
பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு
—குறள்

தன் ஆட்சியில் காணும் குற்றம் குறைகளை நிவர்த்திக்கவேண்டி குடிகள் எடுத்துச் சொல்லும் சொற்களை பொறுத்துக்கொள்ளும் அரசன் தான் உலகினை ஆளக்கூடியவன்.

உணவு பிரச்னைகள்-கொள்முதலும் ரேஷனும்

R. ஸ்ரீனிவாசன் (கிராம புனருத்தாரண கௌரவத்தொண்டன்)

உலகில், பிரஜைகளின், உணவு, உடை, இருப்பிடம், இதுகளின் நலன்களை கவனிக்கவே சர்க்காரை நாம் ஏற்படுத்திக்கொள்ளுகின்றோம். மற்றும் சர்க்கார் அலுவல்களும் இம்மூன்று பிரச்னைகளை, நன்கு பரிபாலிப்பதற்கேயசம், என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

பிரஜைகள் என்கிற வார்த்தையில் நாட்டுபுறத்தான் நகர் புறத்தான், தொழிலாளி, முதலாளி, விவசாயி, மிராசுதாரர், என்கிற பாகுபாடு, உணவு, உடை, இருப்பிடம் என்கிற 3-பிரச்னைகளிலும் இடம்பெற நியாயமே யில்லை. ஆளும் சர்க்கார் இவ்வித பாகுபாடுகளை புகுத்த முயன்றால், அது துரதிர்ஷ்டமேயாகும்.

ஆடம்பரமோ, அதிகமோ அல்லாது அளவில் உயிர்வாழ இன்றியமையாத அளவு வரையிலாவது, இவைகளை அடைய சர்க்கார் உதவ கடைமைபட்டுள்ளனர். இதை உணர்ந்து நமது சர்க்கார் சில நல்ல ஏற்பாடுகள் செய்துள்ளனர். இவ்வேற்பாடுகளுக்கே கொள்முதலும் ரேஷனிங்கும் என பெயராகும்.

நடந்துவரும் ஏற்பாடுகளை பரிசிலனை செய்யுமுன் ஏன் கொள்முதல் செய்யவேண்டும்; ஏன் ரேஷனிங் ஏற்பாடுகள் இருக்கின்றன என்பது

தெரியவேண்டியது அவசியம். இந்த பிரதான அம்சம் விளக்கப்பட்டு விட்டால், சர்க்கார் உதவிகளை நாம் கோரவேண்டிய அவசியம் நன்கு புலனாகும்.

இயற்கையின் வளத்தின் காரணமாக, நம் ராஜ்யங்களில், சிலதில் நிறைய உணவு தான்யங்களும், சிலதில் சிலாகமான வியாபார பொருள்களான தான்யங்களும், விளைவதை காண்கிறோம். ஆங்காங்கே உள்ள பிரஜைகள், அங்கு விளையும் தான்யங்களையே உபயோகித்து நாகரீக மேம்பாடுடையவர்களாயிருப்பதால், பிரதேசவாரியான, ஆற்றல், அறிவு படைத்த பலவித்தியாசப்பட்ட மனிதர்களைகூட நாம் காண்கிறோம். ஆனால் இவ் வித்யாசத்தின் மத்தியிலும் "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" என்கிற குறைந்தபக்ஷ தேவை அத்யாவசியமானது. இது கிடைக்கவே அல்லும்பகலும், சகல ஜீவராசிகளும் ஓய்ச்சல் ஒழிவில்லாமல் வேலை செய்து கிடக்கின்றன. இவ்வேலை முறையை ஒழுங்கு படுத்தி சிதைவடையாமல் பயன்பெற பார்ப்பதே சர்க்காரது கடமையும், அச்சர்க்காரை அமைத்துக் கொண்ட பிரஜைகளின் விருப்பமுமாம்.

இவ்விதம் விளைக்கப்பட்ட பலதரப்பட்ட தான்யங்களை, தமக்குள் பிரஜைகள் உபயோகித்துக்கொள்வதுபோக, மிகுதி யுள்ளதை, தேவைபடுபவர்களுக்கு விற்றுவிடவும் முற்படுவதின்மூலம் உள் நாட்டு வெளி நாட்டு வியாபாங்கள் ஏற்படுகின்றன. இவ்வியாபார வசதிகளை செய்து தரவும் சர்க்கார் எதிர்பார்க்கப்படுகிறார்கள். வியாபாரத்தின்மூலம் அனுகூலம் ஏற்படப்பார்க்க வேண்டுவதும் சர்க்காரின் கடமையாய் விடுகிறது இல்லாவிடில் அதிக ஏற்றுமதியால் பிரதேசம் வரண்டோ அல்லது, ஏற்றுமதியில்லாததால், உற்பத்தியில் அசிரத்தையோ கொள்ள நேரிடும் அல்லவா? தவிர அதிக உற்பத்தியை அழித்துவிடும் "பொசுக்கல் கொள்கை" மனப்பான்மையும் ஏற்பட ஹேதுவாகும். ஆதலால் நன்கு சேகரிக்கப்பட்ட புள்ளி விவரப்படி, ஏற்றுமதி, இறக்குமதி, வியாபாரங்கள் நடந்தேறிவர எதிர்பார்க்கிறோம். இத்தகைய வியாபாரம் நம் தேசத்திற்குள்ளும், பிற நாடுகளுடனும் நடக்க ஏற்பட்டதும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் துடர்கின்றன. இவைகளெல்லாம் சேர்ந்தே நம் ராஜ்ய அமைப்பாய் அமைகிறது.

ஆகவே எந்த ராஜ்ய சர்க்காரும் தங்களைத்தனியாக கருதிக்கொள்ள இடம் ஏற்படவில்லை. இதே மனப்பான்மையுடன் நோக்கினால், உலகம் பூராவும் உள்ள எந்த சிறிய, பெரிய வல்லரசும் தங்களைத்தனியாக பாவித்துக் கொள்ள இயலாது என்பதும் விளங்கும். பிரத்யக்ஷநிலை, தற்போது வேறு விதமாய் தோன்றினாலும், நல்லோர்கள் சிந்தனைகள்யாவும் இவ்வழியில்தான் செல்கின்றதை காண்கிறோம். இங்கும் அங்கும் அக்கரைபட்ட நபர்கள் ராஜாங்க அலுவாளர்களாய் ஏற்பட்டு தேசநலன்கள் ஒரு தலையாக நடந்தேறி வருவதுமுண்டு. ஆனால் பிரஜைகளின் க்ஷேமத்தை குறைத்துவிடக்கூடிய செயல்புரிய முற்படும் ராஜ்ய சர்க்கார்களின் ஆயுள் க்ஷீணித்தேவருவதையும் நாம் பார்க்கலாம்.

—தொடரும்.

உரிமை எனது நண்பன்

அன்னியூர் - மா. முருகனூர்

★

உணர்ச்சியே எனது நண்பன்
உலகினில் வாழும் மக்கள்
பண்புடன் இல்லை யென்றேல்
பகுத்தறி வூட்டிடுவான்
சொல்லிலோ ரன்பைத் தழுவி
சூழ்ச்சியைத் தகர்த்து மிக்க
நல்லதோர் கொள்கைக் கண்டு
நாட்டினில் உலாவ விடுவோன்
வாழ்வினை வளர்ப்ப தற்கும்
வாய்மையைக் காப்ப தற்கும்
ஆழ்ந்தநற் கருத்து தன்னை
அவயினில் பரப்பு தற்கும்
உளத்தினு லொன்றி நின்று
உழைப்பா லாற்றும் மக்கள்
இளகிய நெஞ்சத் திற்கு
இனியத் துணையாக வேண்டும்.

பாதாள கங்கை அல்லது குழாய் கிணர்

கண்டுபிடிக்கும் விதங்களும் ○ ○ ○
○ ○ ○ இயற்கை அமைப்புக்களும்

By

என். ஜி. ஆப்தே, பி. எஜி., (பி) எம். எஸ்சி., (T) எப். ஜி. எம். எஸ்.
(ஜல நிர்மாண நிபுணர்)

"நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான் நல்கா தாகிவிடின்"

[என்னும் திருவள்ளுவரின் முதுமொழிப்படி கடந்த நான்கு ஆண்டுகளாக மழையின் குறைவால் ஆறு, ஏரி, குளம், கிணர் இவைகளில் நீர்வளம் குன்றி அதனல் பயிர் வளமும் குறைந்து நாட்டில் பசி, பஞ்சம் மேலிட்டுள்ளது. நீர்ப்பாசனந்தான் விவசாயிகளின் ஜீவநாடி. விவசாயிகளுக்குச் சரியான காலத்தில் தேவையான தண்ணீர் கிடைத்தால்தான் நாட்டுக்குப் போதுமான உணவும் தொழிலுக்குவேண்டிய மூலப்பொருளும் உற்பத்திச் செய்யமுடியும். ஆகவே மழையின் குறைவால் மேல் நீர் வரட்சியடைந்துள்ள இக்காலத்தில் நீர்வளம் மிகுந்து பஞ்சம்தீர, பூமிக்கடியில் தேங்கிக் கிடக்கும் நீரை (பாதாள கங்கை) கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்து உணவு உற்பத்திக்கு உபயோகப்படுத்தவேண்டியது அவசியமாகி இருக்கிறது.

நீர் ஊற்றைக் கண்டுபிடித்தலும், அமைத்தலும் ஓர் தனிக் கலையாகும். இதைப் பலர் பலவிதமாகப் பழகியுள்ளனர். பல முறைகளும் கையாளப்பட்டு வருகிறது.

இந்தக் கட்டுரையை எழுதியுள்ள ஸ்ரீ ஆப்தே, மாகாண, மத்திய விவசாய இலாகாவில் சேவை செய்தவர். இந்தத் தொழிலில் நம் நாட்டுப் பழைய நூல்களையும், மேல்நாட்டு நூல்களையும் ஆராய்ச்சி செய்தவர். சரீர உணர்ச்சி, சாஸ்த்ரீயம், இயந்திர சாதனம் ஆகிய பல முறைகளின்மூலம் நீர் ஊற்றைக் கண்டுபிடிக்கும் துறையில் 5 ஆண்டுகளுக்குமேல் அனுபோகமுள்ளவர். இவருடைய நீண்டகால ஆராய்ச்சியும் அனுபவம் மிக்க இக்கட்டுரை இக்கலையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மிகவும் பயன்படும் எனக் கருதுகிறோம்.] ப—ர்.

உலகில் தோன்றிய எல்லா ஜீவராசிகளும், தாவர ராசிகளும் உயிர்வாழ நீர் இன்றியமையாததாகும். ஆகவே உலகில் ஜீவராசிகளும், தாவர ராசிகளும் எந்தக்காலத்தில் சிருஷ்டிக்கப்பட்டதோ—அந்தக் காலத்திலிருந்தே தண்ணீரின் தேவையும், அதை தேக்கிவைத்தலும் ஏற்பட்டிருக்கவேண்டும். மற்றும் மனிதனுக்கு எப்போது பரிசுத்தமும் ஆரோக்கியமும் வேண்டுமென்று தோன்றியதோ அதுமுதல் பூமியின்கீழ் உள்ள சுத்த ஊற்று ஜலத்தில் கவனம் செலுத்த தொடங்கியிருக்கவேண்டும். தவிர பூமிக்குமேல் தேக்கி வைக்கப்பட்ட ஜலம், பற்றுமலும் வரட்சி ஏற்பட்ட காலத்திலும் பூமிக்கடியிலுள்ள ஜலத்தில் கவனம் செலுத்தியிருக்கவேண்டும். மேலும்—புதியதாக குடியேற்றம் செய்யப்பட்ட இடத்திலும் வருடம் பூரவும் ஜலம் கிடைக்காத இடத்திலும் பூமிக்கடியிலுள்ள ஜலத்தைக் கொண்டுவர முயற்சி செய்திருக்கவும் வேண்டும். ஆகவே நீரின் தேவைக்காக பூமிக்கடியிலுள்ள பாதாள ஊற்றுக்களை கண்டுபிடிக்கும் வேலை (சுமார் 5000 ஆண்டுகளுக்கும்) மிக பழமையானது.

இந்திய சமஸ்தானங்களின் சஞ்சிகை 3-வது புத்தகம் 2-வது இதழில் ஈஜிப்ட் - பாபிலோன் முதலிய இடங்களில் பூமிக்குமேல் தேக்கங்கள் (குளங்கள்) கட்டி தண்ணீரை தேக்கி வைத்திருந்து, கிடைக்காத காலங்களில் உபயோகப்படுத்திவந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஷை சஞ்சிகையிலேயே நீர்ப்பாசன விஷயத்தைப்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகள் அந்தக் காலத்தின் நீர்த்தேவையை ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டுகிறது

நமது நாட்டிலும் கங்கை வெளிப்பிரதேசத்திற்கு கங்கையை கொண்டுவந்ததான "கங்காவதாரன்" என்னும் கதையை புராணங்களில் படித்திருக்கிறோம். கங்கையின் பெருமையையுணர்ந்த பகீரதன், கடுமையான உழைப்பும், தளராத ஊக்கமும்கொண்டு படாத பாடுபட்டு, கங்கையை தன் நாட்டுக்கு கொண்டுபோய் தன் முன்னோர்கள் எல்லோரும் நற்கதியடையச் செய்தான் என்பதுதான் புராணக்கதை. இதை நாம் இன்றும் "பகீரதப் பிரயத்தினம்" என்று சொல்லுகிறோமல்லவா!. இதிலிருந்து நாம் அறிவது என்ன? பகீரதன் என்னும் அரசன் இமயமலையில் இயற்கையாக தேங்கிக் கிடந்த ஏராளமான ஜலத்தைப்பற்றி அறிந்து அதைத் தன் நாட்டிற்கு கொண்டுவந்து பயன்படச் செய்யவேண்டுமென்னும் எண்ணங்கொண்டிருக்க வேண்டும். ஆகவே தன் ஆதிக்கத்திலும் அதிகாரத்திலும் உட்பட்ட நாடுகளின் வழியாக ஏராளமான உழைப்பும் பொருள் விரயமும் செய்து கஷ்டப்பட்டு வாய்க்கால் வெட்டியிருக்கவேண்டும். ஷை வாய்க்கால் பூர்த்தியானதும் தேக்கத்திலிருந்து நீரை வாய்க்காலுக்கு வெட்டி திறந்துவிட்டிருக்க வேண்டும். (மேலிருந்து நீர் விழும்) காக்ஷியைத்தான் இந்திய சைத்ரீகர்கள் "கங்காவதாரன்" என்னும் படத்தில் வரைந்திருக்கவேண்டும்—புராணக் கதைகளில் வேறு ஐதீகத்தோடு கூறப்பட்டிருந்தாலும் இரண்டையும் நன்ருக சீர்தூக்கிப்பார்த்தால், பின்னர் கூறப்பட்டதே பொருத்தமாகவும் உண்மையாகவும் இருக்கலாம் என்று நமக்கு தோன்றுகிறதல்லவா? இதிலிருந்தே பாபிலோன் ஈஜிப்ட் ஜலத் தேக்கங்களுக்கும் ஷை நாட்டின் நாகரீக

வளர்ச்சிக்கும் முன்பே நம் நாட்டில் நாகரீகம், ஜலத்தேக்கம் முதலியவைகளில் அபிவிர்த்தி எற்பட்டிருந்தது என்பது எற்படுகிறது. பகீரதனின் முயற்சியும் இந்தக் காலங்களுக்கு வெகுநாள் முன்னரே எற்பட்டிருக்கவேண்டுமென்பதுதான் நமது முடிவு.

நமக்கு இதுவரை கிடைத்துள்ள ஆதாரங்களிலிருந்து எந்தக் காலம் என்பதை குறிப்பாக நிச்சயிக்க முடியாது.

நீர் ஊற்றுகளைக் கண்டுபிடிக்கும் விதங்கள்

சோதிட சாஸ்திரங்கள்:—சோதிட சாஸ்திரமானது மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் கையாளப்பட்டு வருகிறதென்றால் மிகையாது. பாதாள ஊற்றை கண்டுபிடிக்கவும் அந்த சாஸ்திரத்தை உபயோகப்படுத்துகிருர்கள். இவர்களை 2 வகுப்பாக பிரிக்கலாம் அதாவது நீர் ஊற்றுக்களை எங்கே அமைக்கவேண்டுமோ அந்த இடத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து ஷை இடத்தின் ஜாதகரீதியாக சொல்வது; அந்த இடத்தை பார்க்காமலே சொல்லுவது. ஜோதிடர்கள் நீர் ஊற்றுக்கள் (கிணர்) தேவையுள்ளவர்களின் ஜாதகத்தையும் அவர்கள் குறிப்பிட்ட காலத்தையும் ஆதாரமாகக்கொண்டு நிச்சயிப்பார்கள். சோதிட சாஸ்திர ரீதியாக அங்காரகனும் சந்திரனும் நல்ல இடங்களில் அமைந்து வலிமை பெற்றிருக்கும் காலம் எற்றதாக கருதப்படுகிறது. எனெனில் பூமிக்கு அதிபதியாகிய அங்காரகனும், ஜலத்திற்கு அதிபதியாகிய சந்திரனும் ஜாதகனுக்கு உச்சஸ்தானத்தில் இருக்கும் காலம் அறிந்து கிணர் வெட்டினுல் நிலமும் நீரும் வளம் பெறும் என சொல்லுவார்கள். ஆனுல் எவரும் இந்த முறைகளைப்பற்றி சரியென்றே தவறு என்றே சொல்ல முடியாது. இதை முற்றிலும் உண்மையென்று நம்புகிறவர்களும், பொய்யென்று வாதிப்பவர்களும் உண்டு என்ருலும் இதைப்பற்றி ஆதாரபூர்வமாக நிச்சயமாக எதுவும் சொல்வதற்கில்லை.

இவர்கள் தங்கள் மனேஉணர்ச்சியின் சக்தியால் நீர் ஊற்றுகளைக் கண்டுபிடித்து சொல்லக்கூடிய யோகிகளாவர்கள் இவர்கள் நீர்ஊற்றுகளோ கிணரே அமைக்கவேண்டிய இடத்தில் நடந்து பார்த்து மனேதத்துவ உணர்ச்சியின்மூலம் அங்குள்ள மண்ணின் அமைப்பைத் தெரிந்து அந்த இடத்தின் ஜலாதார நிலமையைச்சொல்லுவார்கள். இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் எதோ சரியாக சொல்லிவந்தார்கள் என்று சொல்லிக்கொண்டபோதிலும், இந்த முறைகளில் முற்றிலும் சரியாக சொல்லக்கூடிய எவரையும் தற்சமயம் காண்பது அரிது.

Astral sight என்று சொல்லக்கூடிய சக்தி இருப்பதாகவும் அந்த சக்தியின்மூலம் எவ்விதமான வேறு ஆராய்ச்சியும் உதவியுமின்றி மண்ணின் வயணம், நீரின் அளவு, தன்மை முதலியவைகளைப் பார்க்கக்கூடுமென்று சொல்லுகிருர்கள் ஷை சக்தியுள்ள (Astral sight) வர்களில் இப்போதும் சரியாக காட்டக்கூடியவர்கள் இருக்கிருர்கள் என்று அத்தாக்ஷியுடன் வாதாடுகிறவர்கள் உள்ள நிலமையில் நாம் இவைகளைத் தவறென நிரூபிக்க

அத்தாக்ஷிகள் கிடைக்கும் வரையில் எதுவும் சொல்வதற்கில்லை. ஆனால் இந்த இரண்டு வழிகளையும்பற்றி ஒரு உண்மை மட்டிலும் நிச்சயமாக கூற லாம். அதாவது இவை இரண்டும் ஒரு (Abstract method) என்பதும் இவைகளைப்பற்றி எவ்விதம் ஆதாரமும் குறிப்பும் கிடைக்காதென்பதும் அதை எவருமோ அல்லது எல்லாருமோ அடைய முடியாதென்பதுதான்— அதிலும் இரண்டாவது சொன்ன வழியைப்பற்றினமட்டில் இது முற்றிலும் உண்மையாகும்.

சோதிட சாஸ்திரங்களிலும் நல்ல பாண்டித்தியம் பெற்றிருக்கக்கூடிய சிலர் இருக்கிறார்கள். ஆனால் சாதாரண சோதிடர்கள் இதைப்பற்றி அதி கம் அறிந்திருக்க முடியாதானதால், விஞ்ஞானரீதியாகவும் அல்லது வேறு விதமான உதவியைக்கொண்டும், பிறகு சாதகங்களைப் பார்த்தும் சொல்லு கிறார்கள். நீர் நிலை நிர்மாணத்தைப்பற்றி வாராஹ மிஹிராச்சாரியார் என் னும் பண்டிதர் எழுதியுள்ள Dragargala என்னும் நூலை, ஆராய்வது வழக் கம் இதைப்பற்றி பிரிதோரிடத்தில் விபரமாகக் கூறுவோம். விஞ்ஞான, ரசாயன ஆராய்ச்சிகளில் மிகுந்த பற்றுள்ள இந்த 20-வது நூற்றாண்டில், அமானுஷிய சக்தி பெற்றிருப்பதாக சொல்லும் சிலரையும் சோதிடர்களை யும் யோகிகளையுமட்டிலுமே எல்லாரும் நம்பிக்கொண்டிருப்பதில்லை.

மேலும் இது சம்பந்தமாக நாம் முக்கியமாக கவனத்தில் வைக்கவேண் டிய விஷயம் என்னவென்றால் மேலே கூறப்பட்ட சக்தியுடையவர்கள் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அவ்வளவு சாமார்த்திய சக்தி உள்ள வர்கள் எங்கும் கிடைக்கமாட்டார்கள். யோக சித்தி பெற்றவர்கள் சாதா ரண மனிதர்களிடையே இருப்பார்கள் என்றும், சில ரூபாய்களுக்காக ஊழி யம் செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கவும் முடியாது. அதைப்போல் அபூர்வ திருஷ்டி (Astral sight) உடையவரும் சுலபமாக எவருக்கும் ஊழி யம் செய்ய கிடைப்பதும் துர்லபம். சோதிட சாஸ்திரமும் சாதாரண மனி தர்களுக்கு மிகவும் கடினமானது. அவ்விதம் சாஸ்திரங்களை நன்கு தெரிந் திருப்பதாக வைத்துக்கொண்டாலும், 12 இராசிகளுக்கும் 9 (அ) 11 கிரகங் களுக்கும் உள்ள பொருத்தங்களை நன்கு அறிந்து சொன்னால்தான் சரியான பலனைக் காணமுடியும். சில வழிமுறைகள் அவ்வழிகளை அனுசரிப்பவர் களுக்கு சரியாக இருக்கக்கூடும். இந்த சாஸ்திரங்கள் ஏற்பட்ட காலத்தில் அதில் அனுசரிக்கப்பட்ட முறைகளும் பலன்களும் சரியாக இருந்திருக்க வேண்டும். அந்தக்காலத்தில் அதன் நுணுக்கங்களை சரியாக நன்கு ஆராய்ந்து சொல்லக்கூடியவர்களும் இருந்திருக்கவேண்டும். அவ்வித சக்திவாய்ந்த வர்களுக்காகவே பல பெரிய சோதிட சாஸ்திரங்களும் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இப்போதிய நிலமை வேறுபட்டிருக்கலாம். பொது வாக சிலர் தம்முடைய சிந்தனா சக்திக்குப் புரிந்துகொள்ளக்கூடிய சுலபமான முறையில் உள்ள விஷயங்களைத்தான் மேலெழுந்தவாரியாக சேகரித்து வரு கிறார்கள் இந்த முறைகளினால் சாதாரணமாக எவரும் அறிந்துகொள்ளக் கூடும். இதன் பலன்கள் சில சமயம் சரியாக இருப்பதில்லை.

—(தொடரும்)

விஞ்ஞான ஆராய்ச்சியும்

விவசாய முன்னேற்றமும்

இந்திய விவசாயமும்—சீர்திருந்த முயற்சிகளும்

(மொழிபெயர்ப்பு)

இந்திய விவசாய இலாகாவில் நீண்டகாலம் சேவை செய்து வந்த ஸ்ரீ எச் மான் (H. Mann) என்பவர் தன்னுடைய நீண்ட கால அனுபவத்தின் பயனாக இந்திய விவசாயத்தில் தான் கண்ட குறைபாடுகளையும் அவைகளை நிவர்த்திசெய்து விவசாயம் முன்னேற்றமடையச் செய்யவேண்டிய சீர்திருத்தங்களையும் அதற்கான வழிகளையும் இந்தக் கட்டுரையின்மூலம் 45 ஆண்டுகளுக்கு இந்திய விவசாய சஞ்சிகையில் வெளியிட்டார்.

அதில் வெளியிட்டுள்ள சீர்திருத்தங்களில் சில இப்போது நடைமுறையிலிருந்தாலும் இக்கட்டுரை எழுதிய காலத்தில் (45 ஆண்டுகளுக்கு முன்பு) எப்படி இருந்ததோ அப்படியே இப்போதும் தேவையாகும். ஏனெனில் நம் இந்திய விவசாய முன்னேற்ற பிரயத்தினங்களில் செய்ய விட்டுப்போன அநேக சீர்திருத்தங்கள் அதில் இருக்கின்றன.

அவர் விவசாய முன்னேற்றத்திற்காக செய்யவேண்டிய அடிப்படைச் சீர்திருத்தங்களைப்பற்றித்தான் குறிப்பிட்டிருக்கிறார். எனவே நாம் விவசாய அபிவிருத்திக்காக திட்டம்போடும் ஒவ்வொரு தடவையும் இந்த அடிப்படையான அம்சங்களை ஆதாரமாகக்கொள்வது நலம். இந்தக் கட்டுரையை கிராம விவசாய அபிவிருத்தி வேலையில் ஈடுபட்டவர்கள் மட்டுமின்றி ஒவ்வொரு விவசாயியும் படித்தறியவேண்டியது மிகவும் அவசியமாகும்.

ப—ர்.

இந்திய விவசாயத்தில் முன்னேற்றத்திற்காக செய்யவேண்டிய முயற்சிகளானது பல கஷ்டங்கள் சூழ்ந்த பிரச்னையாக இருக்கிறது. இதைப்பற்றி பல உண்மைகளை ஆராய்ந்தால் இந்திய விவசாயமானது. சிறு துண்டு நிலங்களாக, விவசாய கல்வியும் முன்னேற்றமுமில்லாத ஏழை விவசாயிகள் கையில் இருப்பது புலனாகும். நீண்டகாலமாக இத்தேசத்தின் எல்லா பகுதியிலும் வேரூன்றிபோயிருக்கும் வகுப்பு பிரிவினையும் ஓரளவு காரணமாக

இருக்கலாம். மேலும் இன்றைய விவசாயிகள் முன்னேற்றப் பாதைக்கு வெகு தூரத்தில் இருப்பதுமட்டுமில்லாமல் கல்வியறிவிலும் மிகவும் பிற்போக்காளர்களாகவே இருக்கிறார்கள். மேலே சொல்லிய காரணங்கள் மட்டுமின்றி அவர்களுக்குள்ள சிறு துண்டு நிலமே ஆஸ்தியாகவும் அவர்கள் செய்யவேண்டிய ஒவ்வொரு செலவும் கடன் வாங்கியே செய்யவேண்டியிருப்பதும் அவர்களுடைய நிலமை அபிவிர்த்தியடைய பெருந்தடையாக உள்ளது.

இந்தியாவும் இதர நாடுகளும்:—நமது இந்தியா தேசத்து குடிகளின் நிலைமையானது பல நூதன விஞ்ஞான முறைகளைப் பயிர்த்தொழிலில் அனுஷ்டித்துவரும் பிறதேசங்களின் நிலமையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம்போல் தெரியும்.

உதாரணமாக இன்றைய அமெரிக்காவை (U. S. A.) கவனிப்போம் அங்குள்ள விவசாயிகள் மிக்கத் திறமையும் ஊக்கமுள்ளவர்களாகவும், சிறிதளவாவது சொந்த முதலுடையவர்களாகவும் உலகத்தில் ஏற்படும் எந்த மாறுதலையும் சகிக்கக்கூடிய உறுதி, கட்டுப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள். இங்கேயோ அதற்கு நேர்மாறாக பல பிரிவையுடையவர்களாகவும், சொந்த முதலில்லாத ஏழைகளாகவும் சீர்திருத்தமில்லாத பழைய பழக்க வழக்கங்களிலேயே உழன்றுகொண்டிருக்கும் நோக்கமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

(தொடரும்)

இந்த தேசம் உலகத்திலுள்ள வளப்பம் பொருந்திய செல்வமிக்க நாடுகளிலொன்று. இங்கு விவசாயிகள் நிலத்தை பல நவீன கருவிகளைக்கொண்டு உழுது பயிர் செய்வதில் பழக இந்திய விவசாயிகளுக்கு வேண்டியது வழிகாட்டியும், விவசாய ஞானமும், பொதுவாக இவர்கள் பழக்கத்தில் மாறுதலும் ஏற்படுதல் வேண்டும்.

—Prof. பிரான்விஸேயர்.

உணவு உற்பத்தியைப் பெருக்க

நல்ல பண்ணை முறைகள்

இந்தப் பகுதியில் சிறந்த "பயிர்த்தொழில்" முறைகள் நாட்டிலெங்கும் பரவ பிரசுரிக்கப்படும். நமது வாசகர்கள் தாங்கள் கையாளும் சிறந்த பண்ணை முறைகளையும் அதன் பயனையும் சுருக்கமாக எழுதி அனுப்பலாம்.

நம்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் எங்கெல்லாம் உற்பத்திச் செய்ய முடியுமோ அங்கெல்லாம் அதிக உணவு உற்பத்திச்செய்ய நீர்முடைய பூமியை (வயல்களை) புத்திசாலித்தனமாக சரியான முறையில் பயன்படுத்திக்கொண்டால், நம்மை வதைக்கும் உணவு பஞ்சத்தை தீர்த்துவிடலாம் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. —மகாத்மாஜி

விவசாயிகளின் அனுபவங்கள்

கிராமத்துக்கு ஒரு "பண்ணைத்திட்டம்" வேண்டும்

இப்போது நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் உணவுப்பஞ்சம் தீர அதிகம் உற்பத்தி செய்யப்படவேண்டும். உற்பத்தி பெருக வேண்டுமானால் நல்ல விதை, உரம் கருவிகளைக்கொண்டு சிறந்த முறைகளில் விவசாயம் செய்யப்படவேண்டும். விவசாயிகள் சிறந்த பண்ணை முறைகளை கையாளவேண்டுமானால் கூடி சிறந்த முறைகளை (சாதாரண விவசாயியும் தெரிந்துகொண்டு அதன்படி செய்து உற்பத்தியைப்பெருக்க அந்தந்த பிரதேச விவசாயிகளின் நிலைமைக்குத்தக்கவாறு) விவசாயிகளின் நிலத்திலேயே விவசாயிகளைக்கொண்டே சிறந்த முறைகளை நேரில்செய்து காண்பிக்க கிராமத்துக்கு ஒரு "பண்ணைத் திட்டம்" வேண்டும்.

தற்சமயம் எங்கும்பேசப்பட்டுவரும் இக்கிராமப் "பண்ணைத் திட்டம்" அவசியமா? பண்ணையென்றால் என்ன? அது எப்படி இருக்கவேண்டும், என்ன செய்யவேண்டும், அதிக விஸ்தீரணமுள்ள நிலங்கள் இருக்கவேண்டுமா? அல்லது குறைந்த அளவில் இருந்தாலும் போதுமா? சிறந்த முறைகளை கையாள அதிகம் முதலீடு தேவையா? அந்த முறைகள் லாபகரமானதுதானா? அவைகளினால் விவசாயத்துக்கோ விவசாயிகளுக்கோ நன்மையுண்டா? பண்ணைகளை சர்க்கார்தான் நடத்தமுடியுமா அல்லது சாதாரண விவசாயிகளும் நடத்தமுடியுமா என பல பிரச்னைகள் கேட்கப்படுகின்றன.

இவைகளுக்கெல்லாம் ஒரே பதிலாகவும் ஒரு பிரத்தியக்ஷ உதாரணமாகவும் இருக்கும்பொருட்டு ***பட்டாபுரம் கலப்பு பண்ணையைப்** பற்றிய விவரமான கட்டுரையை இங்கே பிரசுரித்துள்ளோம். இதன்மூலம் நாட்டிலெங்கும் பல நல்ல பண்ணைகள் ஏற்பட்டு, உற்பத்தி பெருகி உணவு சுயதேவைத் திட்டம் வெற்றிபெறும் என எதிர்பார்க்கிறோம். —ப-ர்.

உணவுப்பொருள் உற்பத்தியும் கால்நடைகள் வளர்ப்பும் சேர்ந்ததுதான் **'கலப்புப்பண்ணை'** யாகும். இந்தமாதிரி பண்ணைகளில் கிடைக்கும் உணவுப் பயிரின் உபபொருள்களானது கால்நடைகளின் வருமானமாகவும் அவைகளின் (வேலை) சக்தியாகவும் நிலங்களை கொழுக்கச்செய்து விளைச்சலை அதிகரிக்கக்கூடிய பண்ணை கழிவு எருவாக மாறுவதுடன், விவசாயியினுடைய குடும்பம், கால்நடை இவைகளுக்கு வேலையைக் கொடுக்கிறது. தீவனப்பயிர் உற்பத்தியானது கால் நடைகளை வளர்ப்பதற்கு மட்டும் இல்லாமல், பால், தயிர், வெண்ணை, முட்டை, மாமிசம், கம்பிளி முதலிய அத்தியாவசியமான ஆகார வஸ்துக்களை மிக சிக்கனமாக உற்பத்திச்செய்ய உபயோகப்படுவதன்றி "புறணிவகையுள்ள தீவனப்பயிர்கள்" மண்ணினுடைய வளப்பத்தை விருத்தி செய்யவும் உபயோகப்படுகிறது. இந்த விதமான கலப்புப்பண்ணைகள் விவசாயியினுடைய வருமானத்தை அதிகரிக்கச் செய்வதுடன் வருடம் பூராவும் கிடைக்கும்படியும் செய்கிறது. இயற்கையின் சோதனைகள், பருவக்கோளாறு, பூச்சி நோய்களின் தாக்குதல்கள் விலைவாசியின் மாறுதல் இவைகளினால் பாதிக்கப்பட்ட காலத்தில் கால்நடைப் பிராணிகள் இதர உப வருமானத்தால் நிலமையை ஒருவாறு சமாளித்துக் கொள்ளவும் உதவுகிறது. ஆகவே கிராமங்கள், விவசாயம், விவசாயிகளும் முன்னேற்றமடையவேண்டுமானால் பயிர்த்தொழிலோடு உயிர்ப் பிராணி வளர்ப்பு முதலிய பல உப குடிசைத்தொழிலும் விருத்தியாக்கப்படவேண்டும். அதாவது விவசாயம், கால்நடை, விவசாயிகளின் பொருளாதாரம் முதலிய பிரச்னைகளைத் தீர்க்கக்கூடியவிதமாக பாரத தேசத்தில் எங்கும் பல "கலப்புப்பண்ணைகள்" (Mixed Farming) ஏற்படவேண்டும்.

பட்டாபுரம் கலப்புப் பண்ணை

இம்மாதிரி "கலப்புப்பண்ணைகள்" நாட்டிலெங்கும் ஏற்பட்டு நல்ல பலனும், வருமானமும் கிடைத்து விவசாயிகளின் பொருளாதாரம் வாழ்க்கைத்தரம் விருத்தியாகவேண்டுமென்னும் கருத்துடன் நமது பாரதநாட்டிற்கு புதியதல்லாததும், நமது நிலமைக்கேற்றதுமான "பட்டாபுரம் கலப்புப் பண்ணை" முறைகளை இங்கு சுருக்கமாக தெரிவிக்கிறேன். இந்தப் பண்ணையானது 8—1—1945ல் மேன்மை தங்கிய ஒரிசா கவர்னர் சர். வில்லியம்

---

*[இந்தக் கட்டுரை "இந்தி விவசாயி" Vol. 7, No. 1 சஞ்சிகையில் ஒரிசா மாகாண கால்நடை அபிவிர்த்தி இலாகா டைரக்டர் ஸ்ரீ கௌரா அவர்களால் எழுதப்பட்டது.]

ஹாவ்த்தோர்ன் K.C.S.I., K.C.I.E., J.P., I.C.S., அவர்களாலும், இந்திய அரசாங்க கால்நடை கமிஷனர் C. வில்லியம் O.B.E. M.R.C.V.S., D.V.S.M., அவர்களாலும் பார்வை இடப்பெற்று பாராட்டப்பட்டதுடன் நாட்டிற்கும் விவசாயிகளுக்கும் நலன் தரக்கூடிய இந்தமாதிரி "கலப்புப் பண்ணைகள்" பல உடனே ஆரம்பிக்கும்படியும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

சர்க்கார் இலாகாக்களின் பிரசாரத்தினால் தூண்டப்பட்டு நூதன பண்ணை முறைகளில் உணர்ச்சி ஊக்கம் உள்ள விவசாயி ஸ்ரீ T. வெங்கிட கிருஷ்ணய்ய பந்துலு என்பவர் ஒரிஸ்ஸா மாகாணம், கஞ்சம் ஜில்லாவில் பட்டாபூர் ஜமீன் எல்லையில் தனக்குள்ள 14-00 எக்கர் விஸ்தீரணமுள்ள பூமியை "கலப்புப்பண்ணை" முறையில் மாற்றி விருத்திசெய்ய 1942ம் வருஷத்தில் ஆரம்பித்தார். ஷை பண்ணையை அபிவிர்த்திசெய்ய மாகாண விவசாய, கால்நடை இலாகாக்கள் தங்கள் சிப்பந்திகளைக் கொடுத்து ஆலோசனையும் உதவியும் கொடுத்துவந்தார்கள்.

சிறந்த பண்ணை முறைகள்

பண்ணையில் உற்பத்தியான பயிர் வகைகளும் சாகுபடியான விஸ்தீரணமும் :—

நெல் (இரண்டாவது போகம் பயிர் வகைகள் சாகுபடி செய்யப்பட்டது)	...	எகர். 8–00
கரும்பு	...	2–00
மக்காச்சோளம் (உணவுக்கும் கால்கடை தீனிக்கும்)	...	0–75
பிரி (கால் நடை தீனி)	...	0–20
காராமணி ஷை	...	0–50
தக்காளியும் சோயா பீன்ஸ் (மாற்றுப்பயிர்)	...	0–50
வாழை	...	0–50
கத்திரி	...	0–50
கேழ்வரகு	...	0–50
உருளைக்கிழங்கு	...	0–75
நாட்டு உளுந்து	...	0–10
மொத்தம்	...	14–00

—தொடரும்

"நல்ல வாழ்க்கை—நல்ல பண்ணை முறைகள் ஆகியவைகளை பரவச்செய்வதற்கு சுலபமான வழி, அவ்வித நல்ல முறைகளை ஜனங்கள் பார்த்து தெரிந்துகொள்ளும்படி ஒவ்வொரு கிராமத்திலும், மாதிரி செய்து காண்பித்து கற்றுக்கொடுப்பதேயாகும்".

—எப். எல். ப்ரயின்.

கிராமச் சீரமைப்பு வேலை
அல்லது
கிராமப் புனருத்தாரணம்

கிராம ஊழியன்

கிராம சீரமைப்பு ஏன்?

நமது தேசத்தின் பெரும் பகுதி கிராமங்களேயாகும் மொத்த ஜனத் தொகையிலும் அதிக விகிதாசாரம் கிராமவாசிகளேயாவர். பெருவாரியாக மக்கள் ஈடுபட்டுள்ள தொழிலும் விவசாயமேயாகும். மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஜீவாதாரத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவைகள் விவசாயிகளால் கிருஷித்தொழில் மூலம் கிராமங்களில் உற்பத்தியாகும் மூலப்பொருள்களிலிருந்தே கிடைக்கின்றன என்பதும் அவ்விதம் நமக்குத் தேவையான மூலப்பொருள் உற்பத்திக்கு கிராமங்கள் சுபிக்ஷமான நிலமையில் இருக்கவேண்டுமென்பதும் நாம் மறக்கமுடியாததோருண்மையாகும்.

மனித சரீரத்தில் ஹிருதயம், இரத்தம், ஜீவநாடிகள் ஆகியவைகள் எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியம் வாய்ந்ததாகும் நம் நாட்டிற்கு கிராமங்களும், கிருஷித்தொழிலும், கிருஷிகர்களும். எப்படியெனில் இருதயத்திலிருந்து சுத்த இரத்தமானது ஜீவநாடிகள்மூலம் சரீரத்தின் இதர பாகங்களுக்கு அனுப்பப்படாவிட்டால் அந்தப் பாகம் எப்படி ஒரு விஞடி கூட பிரயோசனப்படாதோ - அந்த விதமாக ஹிருதயத்துக்கொப்பான கிராமங்களிலிருந்து சுத்த இரத்தம் போன்ற கிருஷிமூலப் (உணவு, உடை) பொருள்கள் ஜீவநாடிபோன்ற கிருஷிகர்களால் உற்பத்தி செய்யப்பட்டு தேசத்தின் இதர பாகங்களுக்கு அனுப்பப்படாவிட்டால் அவைகள் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகவேண்டுமென்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஆகவே நாட்டில், மக்கள், நகரங்கள், தொழில்கள் ஆகியவை முன்னேற்றமடைந்து சுகமாக வாழ கிராமங்கள்தான் முக்கியமென்பதையும், கிருஷித்தொழிலை முன்னேறச்செய்து கிருஷிகர்கள் உற்பத்தியைச் செய்ய முடியாவிட்டால் நகரமக்கள் தங்கள் வேலைகளைச் செய்யமுடியாமல் பரிதாபகரமான நிலமையை அடையவேண்டுமென்பதை நாம் முக்கியமாக கவனிக்க வேண்டும். தற்கால உணவு, உடை, பொருளாதாரப் பஞ்சமே இதற்குதக்க சான்றாகும்.

நாம் செய்த பெருந்தவறு

சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக நடந்த அன்னியராட்சியில் நகரங்களின் பிரச்னைகள்தான் முக்கியமானதாக கருதப்பட்டு வந்தன. அவைகளின் தேவைகள்தான் கவனிக்கப்பட்டு வந்தன. நகரங்களின் ஆடம்பர வாழ்க்கைக்குத் தேவையான பலவித சௌகர்யங்கள் செய்து தரப்பட்டு வந்தன. ஆனால் கிராமங்களின் பிரச்னைகள் புறக்கணிக்கப்பட்டன. கிராமவாசிகள் (கிருஷிகர்கள்) அலக்ஷியப்படுத்தப்பட்டு வந்தனர். அவர்களுக்கும் அவர்களுடைய தொழிலுக்கும் தேவையான முக்கிய வசதிகள்கூட செய்துக் கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாக கிருஷித் தொழிலில் ஊக்கமின்றி, உற்பத்தி குறைந்து, கிருஷிகர்களின் பொருளாதாரம் குன்றி கிராமங்கள் சீர்கேடான நிலமையை அடைந்துவிட்டன. இதற்கு நேர்மாறாக நகரங்களில் மக்கள் பெருகி அடிமைக்கல்வியினால் அன்னிய பொருள்களுக் கடிமையாகி மோட்டு நாகரீக வாழ்க்கையிலீடுபட்டதால் தேவைகளும் அதிகமாகிவிட்டது. இவ்வித மாறுதலால் நாட்டின் உற்பத்தி குறைந்தும், தேவை அதிகப்பட்டும் உணவுப்பொருள்கள் உள்பட பல பொருள்கள் அன்னிய தேசங்களிலிருந்து பெரும் அளவில் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. இதனால் நம்நாட்டுச் செல்வங்கள் வெளியேறி நாட்டின் பொருளாதார நிலமையும் பாதிக்கப்பட்டுவிட்டது.

கிராமங்கள் நல்ல சுபிட்சமான நிலமையில் இல்லாவிட்டால் நாம் கவலைக்கிடமான நிலமையில் இருக்கிறோம் என்பதை திட்டமாக தெரிந்து கொள்ளலாம். மனித வாழ்க்கைக்கு சரீரம் எப்படி பாதுகாக்கப்பட வேண்டுமோ அவ்விதமே தேச முன்னேற்றத்திற்கு கிராமங்கள் கவனிக்கப் படவேண்டும். கிராமங்களின் சுபிட்சத்திற்கு கவனம் செலுத்தாமல் நகரங்களிலே மேலெழுந்தவாறு அழகுபடுத்திக்கொண்டே போவதானது அணு அணுவாக அரித்துக்கொல்லும் வியாதியை சரீரத்தில் வைத்து மேலே நல்ல பட்டாடைகளை அணிந்து மூடிக்கொள்வதற்கொப்பாகும். மேலே பார்வைக்கு அழகாகக் காணப்பட்டாலும் நாளடைவில் வியாதி முற்றி சரீரத்தையே அழித்துவிடவும் கூடும் என்பதை சிறிதளவும் சிந்திக்கவில்லை.

தீமையிலும் ஒரு நன்மை

இந்த நிலமையை விளக்கி, நமது தவறுகளை திருத்தி, உணவுக்கும் உடைக்கும் அடிப்படையான கிராமங்கள், கிருஷித்தொழில்கள், கிருஷிகர்கள் முன்னேற்றம்தான் நாட்டின் சுதந்திரத்திற்கு அஸ்திவாரம் என்பதை உணர்த்தி அதற்காகவே பாடுபட்டு வந்தார் நமது தேசத் தந்தை, அடிமையென்ற அவச்சொல் நீக்கிய அண்ணல், மன்னனுக்கும் மக்களுக்கும் மாறுகாணாத மகாத்மா காந்தியடிகள்.

இந்த நிலமையில்தான் இரண்டாவது ஐரோப்பிய மகாயுத்தம் மூண்டது இந்த யுத்தத்தினால் உலகிற்கு ஏற்பட்ட நஷ்டம் கணக்கிலடங்காது. இதனால் நமது நாட்டில் இறக்குமதி நின்றுவிட்டது. உற்பத்தியான

பொருள்களும் யுத்தத்திற்காக கொள்முதல் செய்யப்பட்டுவிட்டன. இதனல் மக்களின் அன்ருடத் தேவைக்குக்கூட பொருள்கள் கிடைப்பது அரிதாகி விட்டது. இதன் காரணமாக பதுக்கலும் கொள்ளைலாப வெறியும் வளர்ந்து விட்டது. நாட்டில் பஞ்சமும் பட்டினியும் ஏற்படவே கலகங்கள் மூண்டது. இதைத் தீர்க்க கண்ட்ரோலும் ரேஷனும் வந்தது; கூடவே லஞ்சமும் கருப்பு மார்க்கெட்டும் (Black market) பிறந்தது. மொத்தத்திலே இன்று நம் நாடு அடைந்துள்ள இந்த நிலமைக்குக் காரணம் அன்னிய ஆட்சியின் அசிரத்தையும் நமது ஊக்க குறைவுந்தான். பல இன்னல்களுக்கும் கொடிய கஷ்டங்களுக்கும் உறைவிடமான யுத்தம் முடிந்தது. இந்தக்கொடிய யுத்தத்தினல் ஏற்பட்ட பல தீமைகளிலும் நமக்கு நன்மையும் ஏற்பட்டுள்ளதென்ருல் அதில் ஆச்சரியமில்லை.

யுத்தமும் ஒருவாராக முடிவுற்றது. நமது நாடும் 200 ஆண்டுகளாக இருந்த அடிமைத்தனம் ஒழிந்து சுதந்திரம் பெற்றது. அறிவுக்கண் திறந்தது, நாம் செய்த தவறுகளை உணர்ந்தோம். "நம் கையே நமக்கு உதவி"யென்பதை உணர்ந்து உழவுக்கும் தொழிலுக்கும் முன்னேற்ற காலம் வந்தது. உழவும் தொழிலும் விருத்தியடைந்து சுபிட்ச நிலமையடையப் பல திட்டங்களை நடத்திவருகிறது நமது சுதந்திர குடியரசு சர்க்கார். அதில் ஒன்று தான் இந்த கிராம சீரமைப்பு அல்லது புனருத்தாரணத் திட்டம். கிராமங்கள் சுபிட்சமும் சந்தோஷமும் பெருகி முக்யத்துவத்துடன் விளங்கவும், நகரங்கள் அவற்றுக்கு உதவி செய்பவைகளாக இருக்கவேண்டுமென்பதுதான் மகாத்மாஜி அவர்களுடைய நோக்கமுமாகும்.

கிராம புனருத்தாரணமென்ருல் என்ன?

நமது நாட்டில் போதிய நிலவளம் நீர்வளம் எல்லாம் இருந்தும் மேலே கூறப்பட்ட காரணங்களால் க்ஷீணமடைந்துள்ள கிராமங்களில் உற்பத்தி குறைந்து உணவுப்பொருள்கள் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு இறக்குமதி செய்து வருகிறது. இவ்விதம் நம்நாட்டு செல்வம் வெளியேறுவது நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடியதாகும். ஆகவே பாரதநாட்டின் முன்னேற்றத்திற்குத் திட்டங்கள் வகுக்கும்போது முதலில் தேசத்திலிருந்து வெளியேறும் செல்வங்களைத் தடுத்து நாட்டின் முன்னேற்றத்திற்கு பயன்படும்படி செய்வது அவசியமாகிறது. இவ்விதம் இறக்குமதி குறைந்து ஏற்றுமதி பெருகி நம் நாட்டின் பொருளாதாரம் விருத்தியடையவேண்டுமானல் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். உற்பத்தி பெருகவேண்டுமானல் கிருஷிகர்கள் நிலை உயர்ந்து, கிருஷித்தொழில் வளம்பெற்று கிராமங்கள் சுபிட்சமடையவேண்டும்.

ஆகவே கிராம மக்கள் (கிருஷிகர்கள்) கல்வி, சமூகம், சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்து உற்பத்தியைப் பெருக்கி, சந்தோஷமும் சுபிட்சமும் செல்வ சீரும்சிறப்பும் பெற்று, கிராம வாழ்க்கையை ஒழுங்காக நடைபெறச் செய்வதே கிராம புனருத்தாரணத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

கிராம சீரமைப்பில் முதல் கடமை

கிராமங்கள் முன்னேற்றமடைந்து கிருஷிகர்கள் நல்ல நிலமையில் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொள்வதற்கும் தங்களுக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்துக்கொள்வதற்கும் அவர்களுடைய பொருளாதார நெருக்கடி நிவர்த்தியாகவேண்டும் இவ்விதம் பொருளாதார நெருக்கடி குறைந்து நிலமை உயரவேண்டுமானால் கிருஷிகர்கள் தங்களிடமிருந்து வீணாகப் போகும் வஸ்துக்களை முதலில் தடுக்கவேண்டும். அதாவது வயல்களில் நண்டுகளாலும் எலிகளாலும் செய்யப்பட்டுள்ள துவாரங்களை அடைக்காமல் நீர்ப்பாய்ச்சினால் அந்நீர் வயலில் தங்கி பயிர் வளர்ச்சிக்கு உபயோகப்படாமல் துவாரங்களின் வழியாக வெளியேறி நமது உழைப்பையும் சக்தியையும் வீணாக்கிவிடுகிறது. இதுபோலவே நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ நம்மிடமிருந்து வீணாகும் (சக்திகளை) பொருள்களை தடுக்கவேண்டியது அவசியம். Waste not and Want not என்ற ஆங்கில பழமொழிப்படி நம்மிடமிருந்து வீணாகும் வஸ்துக்களை தெரிந்து வீணாவதை தடுத்தால் அவை நம்மிடம் தேங்கி அந்த அளவுக்கு நம் தேவை குறைவதுடன், பொருளாதார நெருக்கடியும் குறையும். அதிகத் தேவைதான் அதிக நெருக்கடிக்கு காரணம். உற்பத்தியைப் பெருக்கி இந்நெருக்கடியைத் தீர்க்க சிறிது காலதாமதமாகலாம். ஆனால் வீணாவதை தடுப்பதின்மூலம் நெருக்கடியை உடனடியாக குறைக்கமுடியும் என்பது கவனிக்கத்தக்கது. ஆகவே நம்மிடமிருந்து வீணாகும் (சக்திகள்) பொருள் எவை என்பதையும், எப்படி தடுக்கலாம் என்பதையும் சுருக்கமாக கவனிப்போம்.

(1) கிராம மக்கள் (கிருஷிகர்கள்) தங்கள் கிருஷித்தொழிலை விருத்தி செய்து உணவுப்பொருளை உற்பத்திசெய்ய அடிப்படை ஆதாரமாக உள்ளது பூமியேயாகும். பூமியின் மண்கண்டம் எவ்வளவுக்கெவ்வளவு வளப்படுத்தப் படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு உற்பத்தியும் பெருகி பொருளாதாரமும் முன்னேறுகிறது. அதற்கு விவசாயிகள் உழவு, எருவு, உழைப்பு ஆகியவைகளை செலவு செய்து வளப்படுத்தவேண்டும். அப்படி வளப்படுத்துமுன், பூமியிலிருந்து வளப்படுத்தப்பட்ட மண், சரியான கவனிப்பில்லாமல், மழை காற்று முதலியவைகளால் வீணாவதை தடுக்கவேண்டும். இந்த மண் அரிப்பினால் (Erosion) மட்டும் ஞூ 1-க்கு ஏகர் ஒன்றுக்கு 115 டன் மண்ணுக்கு மேல் வீணாவதாக கணக்கெடுத்திருக்கிறார்கள். இவ்விதம் வீணாகக்கூடிய மண், நன்றாக பண்படுத்தப்பட்ட மேல் பாகமாகும். இதில் பயிர் வளர்ச்சிக்கு தேவையான சத்துப்பொருள் அதிகம் இருக்கின்றன. இவ்வித சத்துள்ள மண்ணை வெளியே வீணாக போகும்படி விட்டுவிட்டு, உரம் முதலியவைகளுக்கு ஏராளமான செலவு செய்து பாடுபடுவதில் பலனில்லை. ஏனெனில் நாம் போடும் சத்தைவிட வெளியேறும் சத்து அதிகமாக இருக்கிறது. ஆகவே மண்ணில் சத்தை விருத்திசெய்வதற்குமுன் மண்ணிலிருந்து வீணாக வெளியேறும் சத்தை, சரியான முறைகளைக் கையாண்டு தடுத்து பூமியிலேயே இருக்கும்படி செய்தால் மண்ணின் வளப்பம் விருத்தியாவதுடன், அதற்கு செய்யவேண்டிய செய்நேர்த்திச் செலவு வேலைத் தேவையும் குறைந்து வருமானத்தையும் விருத்தி செய்யுமல்லவா? —தொடரும்

பட்டிக்காடு

(அன்னியூர் - மா. முருகனர்)

என்னடா சுத்தப் பட்டிக்காடு?

இப்படிப் பேசுகிருன் நகரத்தான் போக்கை யறியாது நடக்கின்ற கிராமத்தானைப் பார்த்து நகரத்தான்.

ஆம்! அவனுக்கு எப்படித் தெரியும்? பட்டணத்தான் போக்கு. கீழ் வானம் வெளுக்கத்தான் நாழிகை, அதற்கு முன்னமே புறப்பட்டுவிடுவான் உழைப்பதற்கு. அங்கு பகலவன் பவனியின் பார்வையெல்லாம் பாட்டாளி யின்மேல்தான் இருக்கும். இப்படி நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக் கின்ருனே — அந்த முழு உழைப்பின் பலனை உண்டு கொழுக்கின்ற பட்ட ணம், தன்னைப் பாதுகாக்கின்ற பாட்டாளிகள் நிறைந்த பட்டிக்காட்டைப் பார்த்து, பரிசு வழங்குகிறது—ஏமாளி என்ற நையாண்டியை.

நகரத்துக்குத் தேவையான அரிசிமுதல் அடுப்புக்கரி வரையில்; உற் பத்திச் செய்தனுப்புகின்ற உழைப்பியந்திரம் பட்டிக்காட்டுப் பாட்டாளி; அதுமட்டுமென்ன? அவன், வகை வகையாக உடுக்கின்ருனே, உடை—அந்த உடையின் பஞ்சும், பஞ்சைப் பதமாக்கி நெய்கின்றத் திறனும் நிறைந்தவன் பட்டிக்காட்டான். ஆனல் அவன் உடுப்பதும் உண்பதும் தேவைக்கு மிக மிகக் குறைவானது.

இன்பக் களஞ்சியத்தை ஏற்படுத்துகின்றவனுக்கு இன்னலும் ஏமாளிப் பட்டமும் வரக் காரணமென்ன? அவன் தன் வாழ்க்கையைப்பற்றி கருதா மல் உழைப்பியந்திரமாகவே தன் வாழ்நாளெல்லாம் உழன்றுக்கொண்டிருந் தக் காரணந்தான்.

ஆம்! பட்டிக்காடு, ஓர் ஏணியாகவும், ஓர் ஆசிரியனுகவும், இருந்துக் கொண்டு; பல நகரத்தை உண்டாக்கியதே தவிர, தன் சுயநலத்தில் ஓரள விற்குக்கூட முற்போக்கடைந்ததாகத் தெரியவில்லை. இப்படிக் கிராமம் தன்னலமற்று வாழ்ந்ததால்தான் இன்று தன் மதிப்பை இழந்து ஏமாளிப் பட்டம் பெற்றுவிட்டது.

பட்டிக்காடு—பட்டணத்தான் நாகரிகத்துறையை அடைவதற்கல்லவோ அன்று உலகம் போற்றும் உத்தமர் காந்தியார் அவர்களும், கிராம சேவைக் காக கனவுக்கண்டு, வார்தாவிலே தன் வாழ்க்கை நடத்தினர். அதன் உண்மையை மக்கள் அன்றும் இன்றும் கண்டிலர்.

கிராமத்தில் சூழ்ந்துள்ள மூடப் பழக்கவழக்கங்கள் முற்றிலும் ஒழிய வேண்டும். அப்படி ஒழிந்த நாள்தான் கிராம முன்னேற்றப் பாதையின்

முடிவையடைந்த நாளாகும். அந்த முன்னேற்றப் பாதையைக் காண்பதற்கு இங்கு அறியாமையை அகற்றும் அறிவாலயங்கள் அநேகம் தேவை. அப்பொழுதுதான் பட்டிக்காட்டில் நிறைந்திருக்கும் படிக்காததற்குறிகள் பகுத்துணர்வுப்பெற்று பட்டணத்தின் நாகரீகப்பாதையை அடையமுடியும். இன்னும் அறிவாலயம் மட்டுமிருந்தென்னப் பயன்? அதனுடன் பட்டிக்காட்டான் பகுத்தறிவும், நாட்டின் வளப்பமும், தன் வாழ்க்கையில் வளத்தைக் காணவேண்டுமானால் பட்டணத்தானுக்குள்ள வசதிகள் அனைத்தும் பட்டிக்காட்டிற்குத் தேவை. இதனைப் பாராள்வோர் கவனிக்கவேண்டிய முக்கிய நிகழ்ச்சிகள் கூட என் அவர்கள் பட்டிக்காட்டான் வரிப்பணத்தால் அல்லவா? அரசியல் வாழ்க்கையை நடத்தி ஆங்காங்கு பவனி வருகின்றார்கள்.

அவர்கள் கண்ணில் படவில்லையா? என்ன? பட்டிக்காட்டான் பரிதாபக்காட்சி. சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? அவர்களும்—செல்வத்திற்கே தாய்வீடு போன்றியங்கும் கிராமங்களின் நிலையை. பட்டிக்காட்டானுக்குத் தேவை – படிக்க வசதி நிறைந்த இலவச படிப்பு; உண்ண நல்ல உணவு; உடுக்க உடை; இருக்க இடம்; பகுத்துணரக் கலைக்கழகம்; நாட்டின் நிலையுணர நல்லதோர் நிகழ்ச்சித்தாள்கள் நாலாப்பக்கங்கட்குப்போக வர போக்குவரத்து வசதிகள். இவைகளில் எதேனும் இங்கு சரியாக உண்டா? இந்நிலையில் அவன் வாழ்வதினால்தான் நகரத்தில் நாலணாவிற்குக் கை வண்டி யிழுக்கும் கூலியாட்களுக்கும் கீழாக மதிக்கப்படுகிறான். கிராமத்தில் நான்கு எக்கர் வைத்துக்கொண்டு நாணயமாக வாழ்கின்ற விவசாயிடம் உலக நகரத்தில் இருப்பவன் கிராமத்தில் பெண் கொள்வதோ கொடுப்பதோ என்றால் நரகலோகம் ஒன்று இருப்பதாகச் சொல்லுகின்றார்களே அங்கே போய் உறவு செய்துக்கொள்வதாகக் கருதுகிறான்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக காட்டைத் திருத்தி கடும் வெய்யலில் உழுது உழைக்கின்றானே தன்னலமற்ற உழவன், அவனின் தன்னலமற்றச் செய்கையைக் கண்டல்லவா வள்ளுவப் பெருந்தகையவர்களும், உழுவாருலகத்தார்க் காணி யென்றும், உலகமே உழவின் உழைப்பில்தான் வாழ்கின்றதென்பதை "சுழன் றுமேர்ப்பின்னதுலகம்" என்றும், அவர்களின் வஞ்சகமற்ற வாழ்க்கையின் வாய்மையை நினைந்து "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வா"ரென்றும் அவர்களின் புகழுக்கே துணையாக விளங்கும் ஈகையை எண்ணியன்றோ "இரவாரிரப்பார்க் கொன்றீவர்" என்னும் விளக்கம் தந்தார்.

இத்தகைய உழவர்களின் பெருமையைத் தாங்கிநிற்கும் பட்டிக்காட்டின் வாழ்வு வளங்காண வேண்டுமானால், பட்டிக்காட்டின் குறைகளைப் பாராள்வோர்க்கு எடுத்துக்கூறும் ஆற்றல் நிறைந்த பத்திரிகைகள் நமக்குத் தேவை. அந்தத் தாளில் காந்தியார் கனவு கண்டுச்கொண்டிருந்த கைத்தொழிற் கல்வி, அகிம்சை, ஒப்புறவு வளர்க்கும் கட்டுரைகள், கதைகள் நிறைந்திருக்க வேண்டும். இந்த நிலையில் பட்டிக்காட்டிற்குப் பரிந்து உழைக்குமானால் காந்தியார் கனவு கண்டுக்கொண்டிருந்த கிராம முன்னேற்றத்தை நம் வாழ்நாளில் கண்டு அதன் இன்பத்தை நுகர்ந்துவிடலாம் என்பது உறுதி. பத்திரிகை வளர்ச்சிக்கு பட்டிக்காட்டு மக்களும் தன் சுயநலத்தைத் தகர்த்து பாடுபடவேண்டுமென்பது நமது தலையாயக் கடன்.

எனவே, உங்கள் கடமை, உங்கள் குறைகளை நாடாள்வோருக்கும் நல்லறிஞர்கட்கும் எடுத்தியம்ப முன்வந்துள்ள பத்திரிகைகளை ஆதரிப்பதேயாகும்.

பட்டிக்காட்டின் நலமே—பாராள்வோர் நலம்.

சிறந்த கலப்பைகள், உரம், விதை ஆகியவற்றை உபயோகிப்பதின் மூலம் தானிய உற்பத்தியைப் பெருக்கமுடியும்.

—ஸ்ரீ நேருஜி

சிக்கன விவசாயமும் நூதன விவசாயக் கருவிகளும்

இப்பகுதியில் புதிய விவசாயக்கருவிகள், இயந்திரங்கள், அவைகளின் அமைப்பு, இணைப்பு, இயக்குதல் முதலிய விபரங்கள் வெளிவரும். நமது வாசகர்களின் அநுபவங்களும், அவர்களுடைய சந்தேகங்களுக்குப் பதிலும் இப்பகுதியில் இடமிருக்கும் வரையில் வெளியிடப்படும்.

நாம் ஏன் சிறந்த விவசாயக் கருவிகளை உபயோகிக்கவேண்டும் ?

தேசமெங்கிலும் பரவியிருக்கும் அநேக மாதிரியான விவசாயக்கருவிகள் விதையைத்தெளிப்பது முதல் அறுவடை செய்வது வரையில் பூமியை பண்படுத்தும் நோக்கத்தைக் கொண்டு செய்யப்பட்டதாகும்.

ஆதிகாலத்திலிருந்து முக்கோணவடிவமான மரத்தில் இரும்புக்கொழு இணைக்கப்பட்டதும் மர ஏர்க்காலும் மேழியும் உடைய கலப்பைதான் எங்கும் உபயோகததிலிருந்து வருகின்றது. இந்தக் கருவியானது ஆதியில் அடிமைகளாலும் பிறகு கால்நடைகளாலும் இழுக்கப்பட்டு வருகிறது. இந்தப் பண்டைய காலத்துக் கருவியானது, விஞ்ஞானம் துரிதமாக அபிவிருத்தி அடைந்துவரும் இக்காலத்தில் கூட மாறுதலடையாமல் ஆசியா கண்டம் முழுதும் பூமியை உழுது பண்படுத்துவதற்குப் பொதுக் கருவியாக உபயோகத்திலிருந்து வருகிறது.

ஐரோப்பா தேசத்தில் 18-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் வார்ப்பு இருப்பினால் தயாரிக்கப்பட்ட எஃகு ஸ்டீல் கலப்பைகள் அமெரிக்கா ஐரோப்பா முதலிய இடங்களில் ஆங்கிலேயர்களால் உபயோகத்தில் கொண்டுவரப்பட்டது. நாளடைவில் இந்தியாவிலும் ஷை கலப்பைகள் உபயோகத்தில் கொண்டுவரப்பட்டு அதன் நன்மைகளை நம்மவர்களும் உணர்ந்து வருவதுடன் நாளுக்குநாள் ஷை கருவிகருகளுக்கு தேவையும் கிராக்கியும் அதிகமாகி, நம் நாட்டிலேயே உற்பத்தியும் பெருகிவருவது கண்கூடு.

சென்ற ஒரு நூற்றாண்டுகளாக ஏற்பட்ட இடைவிடாத உழைப்பு, ஆராய்ச்சி இவைகளின் பயனாகப் பலவிதமான கருவிகள் நம் நாட்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மனிதர்கள் இழுத்துக்கொண்டிருந்த காலம் மாறி இன்று இயந்திர சக்தியாலேயே பூமியை உழுது பண்படுத்துவது

முதல் தானியத்தை அறுவடை செய்து களஞ்சியத்தில் சேர்ப்பதுவரையிலும் செய்யக்கூடிய பல கருவிகள் சிறிய விவசாயி முதல் பெரிய ஜமீன்தார்வரை எல்லாருக்கும் ஏற்ற வகையில் பல அளவுகளில் உள்ளன.

ஆகவே மேற்கூறிய பலவித (இயந்திர) கருவிகளை கண்டுபிடிக்கப்பட்டதின் கருத்துக்கள் எல்லாம் ஒன்றுதான். அதாவது பூமியினுடைய வளப்பம் மாறுமல் மேலும் விருத்தி செய்து எவ்வளவு பலன் அடைய முடியுமோ அவ்வளவையும் உற்பத்தி செய்வதேயாகும். இந்த நோக்கம் வெற்றிபெற பூமியின் வளப்பத்தை விருத்தி செய்து உற்பத்தியைப் பெருக்க நூதன திறமை வாய்ந்த விவசாயக் (சாதனங்களை) கருவிகளை உபயோகித்தல், நீர் பாசன வசதிகள், நல்ல உரம், விதைகள், வியாதி, பூச்சி முதலியவைகளைத் தடுத்தல் முதலிய புதிய விவசாய முறைகளை அனுபவத்தில் கொண்டு வருவது அவசியமாகும்.

"குடிவளமே முடிவளம்" ஆனபடியால், குடிகளுடைய முன்னேற்றம் அவனுடைய பொருளாதாரம் முன்னேற்றத்தில்தான் இருக்கிறது. பொருளாதாரம் விருத்தியடைய உற்பத்தி பெருகவேண்டும்; உற்பத்தி பெருக பூமியை நன்ருக பண்படுத்தவேண்டும்; "வெண்ணெய் போல் உழுதால் குன்னு போல்விளையும்" என்னும் பழமொழிப்படி பூமியை பண்படுத்த நல்ல திறமைவாய்ந்த கருவிகள் வேண்டும்.

மேற்கூறிய விதம் திறமை வாய்ந்த நல்ல கருவிகள் உபயோகிப்பதின் மூலம் குறைந்த செலவிலே, குறைந்த நேரத்திலே அதிகப்படியான வேலையை திறமையாக செய்து முடிக்கலாம்.

உதாரணமாக:—

ஒரு நாட்டுக் கலப்பையால் ஒரு எக்கர் நிலத்தை 60மைல் நடந்து மூன்று தடவை உழுவதால்தான் 538 கனஅடி மண் புழுதியாக்கப்படுகிறது. ஆனல் இரும்பு கலப்பையைக் கொண்டு 28-மைல்கள் நடந்து ஒருதடவை உழுவதால் 672 கன அடி மண் புழுதியாக்கப்படுகிறது.

இரும்பு கலப்பையால் உழுத பூமியானது. எவ்வித புல், பூண்டு, உழாத திடல் இன்றியும் நன்ருக இருக்கின்றது. ஆனல் நாட்டுக் கலப்பையைக் கொண்டு 3 தரம் உழுதாலும்கூட V வடிவுள்ள உழாத திடல்களும் களைகளும் இருந்துகொண்டுதான் இருக்கும். இதிலிருந்து சீர்திருத்தப்பட்ட இரும்பு கலப்பைகளைப்போல் திறமையாகவும் லாபகரமாகவும் நாட்டு கலப்பையைக் கொண்டு செய்ய முடியாதென்பதும். நாட்டுக் கலப்பையைக்கொண்டு உழுவதால் ஏற்படும் செலவில் பாதிகூட இரும்பு கலப்பையைக்கொண்டு உழுவதால் ஏற்படுவதில்லை யென்பதும் விளங்குகிறதல்லவா?

வேளாண்மை இதர தொழில்களைப் போன்றதல்ல. அது பருவ காலத்தையும் பட்டத்தையும் அனுசரித்து செய்யவேண்டிய ஒரு தொழிலாம். அதாவது நிலத்தை உழுது பண்படுத்தி விதை தெளிப்பது முதல் அறுவடை செய்து களஞ்சியத்தில் சேர்ப்பதுவரை எல்லாக் காரியங்களும் குறிப்பிட்ட காலத்தில் சரியான முறையில் மண்வயணம், சீதோஷ்ணம், ஈரம், பருவம், பட்டம் முதலிய இயற்கை வசதிகள் அனுகூலமாக இருக்கும்போதே செய்தால்தான் உழைப்பின் பயனை ஒரு விவசாயி அடையமுடியும். அவ்விதம்

வேலைசெய்து முடிக்க விரும்பும் விவசாயிகளுக்கு குறைந்த நேரத்திலே அதிகப்படியானவேலைசெய்யக்கூடிய சிறந்த கருவிகள் வேண்டும். உதாரணமாக மழை பெய்த உடனே நிலத்தை உழுது பண்படுத்த தவறினால் மறுபடியும் மழைக்காக பல மாதங்கள் காத்திருக்கவேண்டும் அல்லவா?

விவசாயமும் ஒரு கைத்தொழிலைப் போலவே அது அபிவிருத்தி அடைகிறதா? லாபகரமானது தானா இல்லையா? என்பதை தெரிந்துகொள்ள சரியான கணக்குகள் வைக்கவேண்டும். திறமையான பண்ணை நிர்வாகம் ஷை பயிர்த்தொழிலின் லாப நஷ்டத்தை விளக்கி காட்டும். நல்ல முறையான விவசாயத்தில் பல இலாயக்கில்லாத கருவிகளை உபயோகிப்பது, இலாயக்கில்லாத பல வேலைக்காரர்களாலும் எற்படும் செலவு, தவிர்க்கமுடியாத அசந்தர்ப்பங்கள் ஆட்கள் கிடைக்காததால் எற்படும் காலவிரயம் இவைகளை நல்ல திறமையான கருவிகளையும் ஒரு சில ஆட்களையும் உபயோகிப்பதனால் தவிர்க்கலாம்.

பயிர்த்தொழிலிலே இவ்வித சக்தியை உபயோகிப்பதால் இன்னும் வேலையில்லாத கஷ்டம் எற்படக்கூடும் என்று ஒரு சிலர் வாதிக்கலாம். ஆனால் அது சரியல்ல என்பது விளங்கும்.

நீண்டகாலமாக குறைந்த செலவில் மனிதனுடைய உழைப்பு கிடைத்து வந்த காரணத்தால் நாம் ஊக்கம், சக்தி என்பதையே மறந்துவிட்டோம். ஆனால் சமீபத்தில் எற்பட்ட யுத்தத்தின் காரணத்தால் அந்த வசதி கிடைப்பது அரிதாகிவிட்டது. கிராமங்களிலுள்ள வறுமை நிலமை, வசதிக்குறைவு, நாகரீக வாழ்க்கையில் மோகம் இவைகளின் காரணத்தால் பலர் அருகிலுள்ள நகரத்திற்கு சென்றுவிட்டார்கள். மேலும் சுதந்திர இந்தியாவில் துரிதமாக பெருகிவரும் பெரிய கைத்தொழில்களும் கிராமவாசிகளை இழுத்துக்கொண்டுவருகிறது. உழைத்து பிழைக்கமுடியாத சோம்பேறிகளும் ஏமாற்றி பிழைக்க எற்ற இடமாக கருதி நகரத்தை அடைந்துவிட்டார்கள். அடிமைக்கல்வியில் ஊறிப்போன வாலிபர்களும் நகரத்திலே உத்தியோகத்தைத்தேடியலைகிறார்கள். பலவிதங்களிலும் கிராமங்களில் உழைப்பாளிகள் குறைந்து நகரங்களிலே உணவாளிகள் பெருகி (உற்பத்தி குறைந்து தேவை வளர்ந்து) வருகிறது. இந்த நிலமையில் விவசாயிகள் சீர்திருத்த முறைகளை கையாளாததவறை எதிர்காலத்தில் உணரவேண்டிய நிலமை எற்படும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்விதம் வேலையாட்களுக்கு எற்பட்டுவரும் பஞ்சத்தை திறமையான நல்ல விவசாயக் கருவிகளை உபயோகித்துச் சமாளிப்பதுடன் குறைந்த செலவில் நிறைந்த வேலையை சிறந்த முறையில் செய்து பயிர்த்தொழிலை இலாபகரமாக நடத்தலாம்.

ஆனால் ஷை மாறுதலை இந்திய விவசாயத்தில் (பூராவும்) உடனடியாக கொண்டுவர முடியாது. இதற்கு நீண்டகால இடைவிடாத உழைப்பு, முயற்சி தேவை. ஆகவே நாம் இதுவரை கையாண்டுவந்த பழையநாட்டு முறைகளில் மாறுதல் செய்யவேண்டுமென்பது மட்டுமின்றி அது அத்தியாவசியமும் அவசரமுமாகும்.

ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய வாழ்க்கைத்தரம், பொருளாதாரம் இவைகள் உயரவும், நாட்டிலுள்ள உடை, உணவுப்பஞ்சம் ஒழியவும், வேலை, காலம், பொருள், இவைகளை வீணாக விரையமாக்காமல் திறமையாகவேலை செய்யக்கூடிய விவசாயக்கருவிகளை உபயோகித்து விளைவைப் பெருக்கவேண்டுமென்பது விளங்குகிறதல்லவா?

"கிருஷிகன்" பஞ்சாங்கம்

விக்ருதிஸு மாசிமீ—1951-ம்ஸு பிப்ரவரி - மார்ச்மீ

பிப். மார்ச்	மாசி	வாரம்	திதி	நக்ஷத்திரம்	யோகம்	விசேஷ தினங்கள்
13	1	செவ்	சப் 14–22	பரணி 19– 4	சி	
14	2	புதன்	அஷ் 16–10	கிருத் * 21–20	அ–சி	
15	3	வியா	நவ 18–29	ரோக 23–54	ம	
16	4	வெள்	தசமி 20–10	மிருக 2–31	சி	சீமந்தம் செய்ய
17	5	சனி	ஏகா 22–38	திருவா 5– 0	சி	
18	6	ஞாயி	துவா 0– 5	புனர் 6–29	சி	பிரயாணம் செய்ய
19	7	திங்	திர 1–44	புனர் 6–31	அ–சி	
20	8	செவ்	சசி 2–25	பூசம் 8–45	சி	பூமி, நிலம் வாங்க
21	9	புதன்	○பௌ 3–0	ஆயி 10– 4	சி	
22	10	வியா	பிர 3–17	மக 10–49	அ–சி	
23	11	வெள்	துதி 3– 0	பூரம் 11– 5	சி	கிழங்கு வகை பயிரிட
24	12	சனி	திரு 2–25	உத் 10–57	ம	
25	13	ஞாயி	சது 1– 0	அஸ் 10–18	சி	களஞ்சியம் சேர்க்க
26	14	திங்	பஞ் 23–35	சித் 9–17	பி–சி	
27	15	செவ்	சஷ் 21–44	சுவா 8– 0	சி–ம	
28	16	புதன்	சப்த 19–30	{ விசா 6–35 அனு 5– 0	சி	கிணர், குளம் வெட்ட
1	17	வியா	அஷ் 17–28	கேட் 3–21	பி–சி	
2	18	வெள்	நவ 12–55	மூலம் 1–44	அ–பி	
3	19	சனி	தச 12–53	பூரா 0–12	சி	
4	20	ஞாயி	ஏகா 10–32	உத்ரா 22–54	அ	கிழக்கே பிரயாணம் செய்ய
5	21	திங்	{ துவா 8– 0 திர 4–58	திரு 21–52	அ–சி	
6	22	செவ்	சசி 4–25	அவி 21–10	சி–ம	சிவராத்திரி
7	23	புதன்	● அமா 3–18	சத 20–30	சி–அ	
8	24	வியா	பிர 2–34	பூரட் 20–52	சி	
9	25	வெள்	துதி 2–53	உத்ர 21–30	சி	விதை விதைக்க
10	26	சனி	திரு 3– 8	ரேவ 22–45	பி–சி	
11	27	ஞாயி	சது 4–15	அசு 0–12	சி–ம	
12	28	திங்	பஞ் 5–40	பரணி 2–5	சி–ம	
13	29	செவ்	சஷ் 5–24	கிருத் * 4–26	சி–அ	

பகல் 6–30—17–40 — இரவு 17–41—6–29

குறிப்பு:—காலை 1 மணியிலிருந்து இரவு 24 மணி வரை ரயில்வே ஸ்டாண்டார்டு மணிப்படி கணக்கிடப்பட்டிருக்கிறது. 0–12 என்பது இரவு மணி 12, நிமிஷம் 12 ஆகும்.

நேயர்களுக்கு

அடுத்த இதழிலிருந்து—

"கிருஷிகர் சபை" என்ற பகு
கிருஷிகர்களை பாதிக்கும் பிரச்னைகவெளியாகிறது. இன்று அவர்களுடைய முன்னேற்றத்திற்கு கவனிக்கல இருக்கின்றன. களும் அநேகம் உள்ளன. ஆனால், அவைகளைப்பற்றிய பிரச்னை பாதிக்கக்கூடியவைகளைக் களைந்து அவசியமானவைகவொதித்து, கட்டுப்பாடான சங்கமோ இல்லை. இக்குறையை ஒழிய, தீர்ப்பதுதான் இப்பகுதியின் நோக்கம். கிருஷிகன் நேயர். கள் அனைவரும் இச்சபையின் அங்கத்தினராவர். பிரதி இதழி லும் இப்பிரச்னைகளை விவாதித்து ஓட்டுக்கு விடப்பட்டு முடிவை அரசியலாருக்கு அனுப்பப்படும்.

இதில் விவாதிக்கப்படவேண்டிய முதல் விஷயம்

உணவுப்பிரச்னையும் பரிகாரமும்?

—இதில் அனைவரையும் கலந்துகொள்ளும்படி கோருகிறோம்.

—ஆசிரியர்.

முக்கிய அறிவிப்பு

கிருஷிகன் பழைய பிரதிகள் (1 முதல் 11 மலர் வரை) நம்மிடத்தில் இல்லை. ஆகவே, கிடைக்காது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஏஜண்டுகள் இல்லாத இடங்களுக்கு விற்பனை & விளம்பர ஏஜண்டுகள் தேவை.

விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

மானேஜர்—"**கிருஷிகன்**" காரியாலயம்
"பயிர்த்தொழில் பண்ணை"
ஹனுமந்தபுரம், அன்னியூர் P. O., விழுப்புரம் S. I. Ry

வருட சந்தா ரூ. 3 தனிப்பிரதி அணு 4

அதிக உணவு உற்பத்திக்கு

சிறந்த மார்க்கம்

★ நல்ல உழவு

★ தேவையான நீர்

★ காலத்தில் களை

★ சிறந்த உரம்

★ காபந்து செய்தல்

ஆகியவைகளே.

இவைகளை சிக்கனமாக, குறைந்த நேரத்தில் தி.. யுடன் வேலை செய்யும் பலதரப்பட்ட விவசாய.. கருவிகளின் தேவைக்கு எங்களிடம் விசாரிக்கவும்

★

மானேஜர்

"பயிர்த்தொழில் பண்ணை"

ஹனுமந்தபுரம் - அன்னியூர் P. O., - விழுப்புரம் S. I.

Printed at the Hanuman Printing Works, Villupuram.
Edited & Published by A. S. Venkata Rao (Payirthozil Pann..
Hanumanthapuram, Anniyur P. O., Villupuram S. I. R.